379

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-க0.] பரிதாபி ஹூ வைகாசிமீ [பகுதி-எ

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| காவியம்:—பத்திராதிபர். | | ௩0௯ |
| ஆன்மபோதம்:—ஸ்ரீமத். பொ. முத்தய்யபிள்ளை. | | ௩௧எ |
| வறுமையிற்செம்மை:— ,, எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர். | | ௩௨௪ |
| முத்தகச்செய்யுட்டிரட்டு:—,, அ. சிதம்பரமுதலியார். | | ௩௩௧ |
| பாரதரகசியம்:— | ,, P. S. S. பிரஸிடெண்ட், மதுரைத் தமிழ்ச்சங்கம். | ௩௩௪ |
| கூடலந்தாதி:— | ,, P. S. S. பிரஸிடெண்ட், மதுரைத் தமிழ்ச்சங்கம். | ௩௩௯ |
| இலக்கண விளக்க மங்கல வாழ்த்து:—,, ச. பூபாலபிள்ளை. | | ௩௪௧ |
| சைவாகமமிருபத்தெட்டு:—,, மு. சபாரத்தின ஐயர். | | ௩௪௯ |
| நுண்பொருண்மாலை:— பத்திராதிபர். | | ௩௫௨ |
| வாழ்த்துக் கவிகள்:-ஸ்ரீமத்-எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர், வி. சாமிநாதபிள்ளை. | | ௩௫௪ |
| புத்தக வரவு:—பத்திராதிபர். | | ௩௫௫ |
| அகப்பொருள் விளக்க மூலமுமுரையும்:— | ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத் தேவர். | கஎஎ |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்து வரவுசெலவு கணக்குமுதலியன:— | | |


பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

380

# கொனோஸன்.

வெட்டையைப் போக்கடிக்க இது ஒரு

ஸ்ரீ கைகண்ட மருந்து. ஓம்

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.




கொனோஸன் சீக்கிரம் எரிச்சலுண்டாவதையும் கோபுர நிமிர்ச்சியையும் தணிக்கிறது இது தான் மிகவும் மேலான மருந்து இது இரைக்குடரைத் தொந்தரவுசெய்யாமலும், அருவருப்பையும் வாந்தியையும் உண்டாக்க மாட்டாதுந் தவிர குண்டிக்காய்க்குறியில் எரிச்சலுமுண்டுபண்ணுது அநேக வைத்தியர்களிடமிருந்து நற்சாக்ஷி பெற்றுள்ளது. **15**-மணி நேரங்களில் சொஸ்தமாகிறது.


**HOLY MULLER & SCHMIDT,**

7, Colootola Street,

**CALCUTTA.**

*Stocked by:—*

T. V. GEORGE & CO.,

*CHEMISTS,*

**MADURA.**

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன். [5]

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-கo.] பரீதாபி ஹூ வைகாசிமீ [பகுதி-எ

## காவியம்.

(உ௬அ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பொருட்சித்திரமாவது பொருள்வனப்புத்தோன்றக் கூறுவது. பொருள் வனப்பாவது உவமங்கொள்ளல், ஒருவினைபெறுதல், இனிது விளங்கல், எடுத்துக்காட்டுறல், நிரனிறையாதல், முரணுறநிற்றல், விலகிமேம்படல், விளக்கென விளங்கல், பலபயனிலைபெறல், பான்மையிற்றோன்றல், மாலையின்மருவல், வான்சிறப்புறுதல் முதலிய பொருளணி வகையாற்றோன்றும் பலவகை நயங்களாம்.

உதாரணம்:—

"படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி" என்பதாம்.

இதனுள் நிறமும், வாயும், கையும், இடையும் ஆகிய பொருள்கள் முறையே படிகமும், பவளமும், தாமரையும், துடியுமாகிய உவமங்கொள்ளலும், நிறமும், வாயும் கையும், இடையும் துதித்தால் என்னும் ஒருவினை கொள்ளலும், அல்லும்பகலுமென முரணுறநிற்றலும், அல்லும்பகலு மனவரதமும்என இனிதுவிளங்கலும், கல்லுஞ் சொல்லாதோ கவியென வான்சிறப்புறுதலுந் தோன்றுமாறு காண்க.

*

இவ்வாறே எடுத்துக்காட்டுவமையணி, நிரனிறையணி, விலக்கணி, விளக்கணி, பலபடப்புனைவணி, இயற்கைநவிற்சியணி, மாலையணி முதலிய பல பல அணிவகைகளாற்றோன்றும் பொருணயங்களுங் கண்டுகொள்க.

சொற்பொருட் சித்திரமாவது சொல்வனப்பும் பொருள்வனப்புமாகிய அவ்விருவகையு மொருநிலைக்களத்துத் தோன்றக்கூறுவதாம். உதாரணம் வருமாறு:—

"இருளினும் வெளியினு மருளினுந் தெருளினும்
இன்பமே யடையினுந் துன்பமே மிடையினும்
ஒருவர்முன் புகழினும் இருவர்பின் பிகழினும்
ஊனிறந் தழியினும் யான்மறந் தொழிவனோ
சுருதிநின் றோலிடுங் கரதலம் நாலொடுந்
துவளுநூன் மார்பமும் பவளவாய் மூரலுந்
திருவரங் கேசர்தஞ் சுருள்கருங் கேசமுஞ்
செய்யநீண் முடியுமத் துய்யசே வடியுமே."

என்னும் இச்செய்யுளில் மருள் தெருள், இன்பம் துன்பம், ஒருவர் இருவர், முன் பின், புகழ் இகழ், முடி அடி என்பன சொன்முரணும் பொருண்முரணும் ஒருநிலைக்களத்துத்தோன்றக் கூறியவாறு காண்க. இன்னும் இவ்வாறே சொல்லணியும் பொருளணியும் விரவிவரத்தொடுக்கும் தொடரெல்லாம் சொற்பொருட் சித்திரமெனக் கொள்க.

இங்ஙனங்கூறிய மூவகைக்காவியங்களும் இயற்றும்புலவரது முதல் இடை கடையென்னும் மூவகைப் புலமைத்திறமைவேறுபாடு பற்றி உத்தமம் மத்திமம் அதமம் எனப் பகுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் அதம காவியம் விலக்கப்படுவதன்று. சொற்கள் காவியத்துக்கு உடம்பாகச்சொல்லப்பட்டமையால் அச்சொல்வனப்பாகிய சித்திரம் காவியத்துக்கு உடல்வனப்பாகின்றது. "உருவின் மிக்கதோருடம்பதுபெறுதலுமரிதே" என்றதனால் அவ்வனப்பும் பெறுதற்கரியதொன்றே.

உத்தமகவிகளுக்கு அம்மூவகைப்புலமைத் திறமையுமுடைமையால் அவர்களாற் செய்யப்படுங் காவியத்தில் தொனியும் வியங்கி

யமும் சொல்லணி பொருளணிகளு மாகியவற்றுள் ஒன்றும் பலவுந் தோன்றத் தொடுக்கும் காவியரசனைகளெல்லாங் காணப்படுகின்றன. "முத்தமிழ்த்துறையின் முறைபோகிய, உத்தமக்கவி"யெனச்சிறப்பிக்கப்பட்டவருமிவரே.

மூவகைக்காவியரசனையுள் தொனியும் வியங்கியமுமாகிய காவியரசனைகளிரண்டும் சுருக்கமானசொல்லிற் பெருக்கமானபொருளையடக்கிக்கொண்டிருத்தலால், அவை கற்பவர்க்குக் குறிப்புணர்வைப் பெருக்கி, நுண்பொருளையுணர்த்தி, வெள்ளைப்பேச்சை விலக்கி, வாக்குவனப்பையுண்டாக்குகின்றன. சொல்லணியும் பொருளணியுமாகிய சித்திரமென்னுங்காவியரசனைகள் கேட்பவர்களுக்குச் செவிக்கும் சிந்தைக்கு மினியவாய் அவ்வாக்கியங்களை மறக்கவிடாமல் மனத்திற்பதிப்பிக்கும் வன்மையுடையன.

அம்மூவகைக்காவியரசனைகளும் செய்யுளில்மட்டுமல்லாமல் உலகநடையிலும் வழங்கிவரப்பெறுகின்றன. அவை வருமாறு:—"புலி பசித்தாற் புல்லைத்தின்னுமா" "கடுகுசிறுத்தாற் காரம் குன்றுமா" "அவனசையாமலணுவசையாது" "அரசனன்றுகேட்பன் தெய்வம் நின்றுகேட்கும்" "அழவழச்சொல்வார்தமர் சிரிக்கச் சிரிக்கச்சொல்வார் பிறர்" என்றற்றொடக்கத்து உலகவழக்கில் வழங்கப்பட்டுவரும் பழமொழிமுதலிய பலவுமாம்.

அவற்றுள் புலி பசித்தாற்புல்லைத்தின்னுமா என்னும் பழமொழியிலுள்ள தொனியென்னும் காவியரசனையானது ஊக்கமுடையோன் மிக்க வறுமையுற்றபொழுதும் தன்னிலைமைக்குத்தகாத இழிந்த பொருளை விரும்பாது தன்முயற்சிகொண்டு தனக்குத் தகுதியான சிறந்த பொருளை நாடித் தேடித்துய்ப்பான் என்னும் விரிந்தபொருளை அடக்கிக்கொண்டிருக்கிற சில சுருங்கிய சொற்களாலமைக்கப்பெற்றிருக்கிறது.

ஆதலா லிப்பழமொழி மனனஞ்செய்தற் கெளியதாயிருக்கிறது. இதிலுள்ள புலி புல் என்னும் மோனைத்தொடையாகய சித்திரரசனையானது அடைமொழியாயன்றிச் சொல்லக்கருதியபொருளையுணர்த்துஞ்சொல்லாலமைக்கப்பட்டமையால் அது இப்பழமொழியை மறந்

தாலும் நினைப்பூட்டி வரப்பண்ணிவிடுகிறது. இவ்வாறே மற்றப் பழமொழியுள்ளு முள்ள சொற்பொருணயங்களை உற்றுநோக்கிக் கொள்க.

இங்ஙனம் காவியரசனைகளி னமைக்கப்பெற்றிருக்கிற எண்ணிறந்த பழமொழிகளெல்லாம் தம்மைக்கற்போரும் கற்பிப்போருமின்றியே கேட்பவர்க்கு மனக்கிளர்ச்சியையுண்டாக்கி அவர் நெஞ்சிற் பதிந்து நிலைபெற்றிருக்கின்றன. இங்ஙனங் கல்லாதாரையும்கற்பிக்கவல்லது காவியரசனையாகையால் அதுகொண்டு கற்பவர்களடையும் பயன் அற்பமானவையல்லவென்பது விற்பனர்க்கு விளங்கத் தக்கதே.

இதுகாறுங் கூறியவாற்றால் அம்மூவகைக் காவியரசனைகளுள் ஒன்றேனு மமையாத வாக்கியத்தொடர் காவியமெனப்பெயர்பெறாதென்பதும் அவை அமைந்த சொற்றொடர் ஒன்றாயினுமாக, பலவாயினுமாக, ஒருவாக்கியமாயினுமாக, பலவாக்கியமாயினுமாக, ஒரு செய்யுளாயினுமாக, பலசெய்யுளாயினுமாக அவை காவியமெனப் பெயர்பெறுமென்பதும் பெறப்பட்டன.

அவற்றுள், வசனகாவியம் களவியலுரைபோலும் உரைநடையாலாக்கப்படுவது. இவ்வுரைநடை செய்யுளைப்போலச் சொற்சுருங்கக் கூறலாகாமையால் மனனஞ்செய்தற் கரியதாயினும் கவிகருதிய பொருளை யாராய்ச்சியின்றி யெளிதினுணர்த்துமியல்புடையது.

காவியச்செய்யுள், தொகைநிலை தொடர்நிலையென விருவகைப்படும். அவற்றுள், தொகைநிலைக்காவியம் கதைத்தொடர்பின்றிக் கருதிய பொருள்பற்றி ஒருவரேனும் பலரேனும் பாடிய பாடல்களின் றொகுதியாம். அது பத்துப்பாட்டு முதலிய சங்கத்தொகைநூல்களும், திருமுறைகளும், திவ்யப்பிரபந்தங்களும் மற்றும் பதிகம் சதகம் முதலிய பல பிரபந்தங்களுமாம்.

தொடர்நிலைக் காவியமாவது சொல்லேனும் பொருளேனுந் தொடர்புடையவாக வரும் பல செய்யுட்டொகுதியே. அவற்றுள் சொற்றொடர் அந்தாதிகளும் பொருட்டொடர் பாரதமுதலிய சரித்திரகவி

களுமாம். அச் சரித்திரகவிகளுள் அறமுதற்பொருள்களைத் தழுவிப் பலவகையிலக்கணங்களும் பொருந்தியகாவியம் பெருங்காப்பிய மெனப்படும். அது:—

"பெருங்காப் பியநிலை பேசுங் காலே
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினென்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட னாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப."

எனத் தண்டியலங்காரங் கூறியவாறு காவியங்களுக்கேற்புடைய வாழ்த்து வணக்கம் வருபொருளுரைத்தல் என்னும் மூன்றுவகை மங்கலத்துள் ஒன்றை நான்முகமாகக்கொண்டு, அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள்களைப் பயக்கும் நீதிநெறிகளை யுடையதாய்க் குடிப்பிறப்பு கல்வி அறிவு ஒழுக்கம் தூய்மை வாய்மை பொறை தயை கொடை வென்றி கீர்த்தி நீதி முதலிய பல நற்குணங்களும் நிறைந்த தன்னிகரில்லாத தலைவனையுடைத்தாய், மலை கடல் நாடு நகர் முதலிய இடவிசேடங்களையும், வேனில் கார் பனி முதலிய பருவவிசேடங்களையும், சூரிய சந்திரர்களின் உதயாத்தமனம் (அந்தி மாலை) முதலிய காலவிசேடங்களையும், நன்மணம் புணர்தல் பொன்முடிகவித்தல் பொழில்விளையாட்டு புனல்விளையாட்டு

களியாட்டு மகப்பேறு பிரிவிடைவருந்தல் கூடிக்களித்தல் முதலிய இன்பநுகர்ச்சிகளையும் ஆங்காங்கு வேண்டியவிடத்து வருணித்துச் சொல்லும் செவ்விய நடையுடையதாயும், மந்திராலோசனையும் தூது செல்லலும் போர்புரிதலும் வெற்றிபெறுதலுமாகிய வீரச்செயல்களை ஒன்றன்பின்னொன்றாகத் தொடர்ந்துவர வருணித்துக்கூறுவதாயும், சாகோபசாகைபோலக் காண்டம் படலம் என்னும் உறுப்புக்களை யுடையதாயும், மிக்க சுவையும் மெய்ப்பாடுங்கண்டு யாவரும் விரும்பு மாறு கற்றோராற் செய்யப்படுவதாம். இவ் விலக்கணங்களிற் சில குறைந்திருப்பினும் அறமுதற்பொருள்களிற் குறைவுபாடிலதாயின் அதுவும் பெருங்காப்பியமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ் விலக்கணங்களுக்கெல்லாம் இராமாயணத்திலுதாரணம் காணலாம்.

வாழ்த்து வணக்கம் வருபொருளுரைத்தல் என்னுங்கடவுள் வழிபாடாகிய மங்கலங்களுள், "நாடியபொருள் கைகூடும்" என்னும் செய்யுள் வருபொருளுணர்த்தலென்னு மங்கலத்தை ஏற்புடைத்தாகி முன்வர வியலப்பெற்றது.

வாய்மை கொடை தயை பொறை ஒழுக்கம் தந்தைதாய் சொற்பணிதலைக்கொண்டொழுகல் மேலோருக்குப் பணிவிடைபுரிதல் முதலிய வறநெறியும், சுக்ரீவசக்யம் வாலிவதம் இராவணவதம் சீதை சிறைமீட்சி முதலியவற்றால் நட்புக்கோடல், கொடியோரை யொறுத்தல், பகைவரைத் தெறுதல், தன்பொருள்கோடல் முதலிய பொருணெறியும், இராச்சியபோகம் ஏகதாரவிரதம் முதலிய இன்ப நெறியும், தவம் விரதவொழுக்கம் தத்துவஞானம் சரீரபரித்தியாகம் முதலிய வீட்டுநெறியும் இடையிடையே காட்டப்படுதலால் அற முதற் பொருள்களில் வழுவாத நடையுடையதாயிற்று.

"மனிதர் வானவர் மற்றுளா ரறங்கள்காத் தளிப்பார்
இனியிம் மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை."

என்று சொல்லப்பெற்ற இராமபிரானைக் கதாநாயகனாகக் கொள்ளுத லாற் றன்னிகரில்லாத தலைவனையுடையதாயிற்று.

வரைக்காட்சிப்படல முதலியவற்றில் மலைவளமும், கடல்காண் படலமுதலியவற்றுட் கடல்வளமும், நாட்டுப்படல முதலியவற்றுள்

நாட்டுவளமும், நகரப்படலமுதலியவற்றுள் நகர்வளமும், ஆற்றுப் படலமுதலியவற்றில் நதிமுதலியவற்றின் வளங்களும் மற்றும் பல பல விடங்களிற் பலபல வளங்களும் வருணித்துக் கூறப்பட்டிருக் கின்றன. கார்காலப்படல முதலியவற்றிற் பருவவிசேடங்கள் வரு ணிக்கப்பெற்றுள்ளன. "மீனீர்வேலை" "மாவியலுதயமாம்" என்றற் றொடக்கத்துப் பல செய்யுட்களிற் சந்தர்ப்பம்பற்றிச் சூரியோதய காலமும் அந்தி மாலை முதலிய சிறுபொழுதுகளும் வருணிக்கப்பட் டுள்ளன. கடிமணப்படலத்தில் விவாகமும், திருமுடிசூட்டு படலத் திற் பொன்முடிகவித்தலும், பூக்கொய்படலத்திற் பொழில்விளையாட் டும், நீர்விளையாட்டுப் படலத்திற் புனல் விளையாட்டும், உண்டாட்டுப் படலத்தில் மதுவுண்டு களித்தலும், திருவவதாரப்படலத்திற் புதல் வரைப் பெறுதலும், பம்பைப்படலத்திற் பிரிவுழிவருந்தலும், சித்திர கூடப்படலத்திற் கூடிக்களித்தலுமாகிய இன்பச்செய்திகள் வருணித் துக் கூறப்பட்டிருக்கின்றன.

மந்திரப்படலத்திற் சூழ்ச்சியும், அங்கதன்றூதுப்படல முதலிய வற்றுள் தூதுசெலவும், முதற்போர்ப்படல முதலியவற்றுட்போர்புரி தலும், இராவணன் வதைப்படல முதலியவற்றுள் வென்றியும் ஆகிய வீரச்செயல்கள் வருணிக்கப்பட்டிருக்கின்றன.

பாலகாண்டமுதலிய காண்டங்களும், ஆற்றுப்படலமுதலிய பட லங்களும் சாகோபசாகைகள்போலக் கிளைத்திருக்கின்றன.

சுவை மெய்ப்பாடு முதலிய பல நயங்களும் நுண்ணுணர்வுடைய புலவரானறியக்கிடக்கின்றன. மற்றும் பெரியபுராணம் திருவிளை யாடல் கந்தபுராணம் சிந்தாமணி மணிமேகலை சிலப்பதிகாரம் பா ரதமுதலிய பலவும் பெருங்காவியத்தின்பாற்படும்.

இத்தகைய தொகைநிலையுந்தொடர்நிலையுமாகிய பழங்காவியங் கள் தமிழில் இதுகாறும் இறந்தனவொழிய இன்னும் எண்ணிறந் தனவுள.

அவையெல்லாம் கல்விக்கு ஆதாரமாகின்றன. கற்பவர்க்கின்ப மளிக்கின்றன. கேட்பவர் மனதை மகிழ்விக்கின்றன. மக்களின்

அறிவை வளர்க்கின்றன. தீக்குணங்களைப்போக்குகின்றன. நற்குணங்களையாக்குகின்றன. நன்னெறியில் நடத்துகின்றன. உயர்ந்த புகழைக்கொடுக்கின்றன. உறுதிப்பொருளையளிக்கின்றன. தமிழை யுலவாது தழைப்பிக்கின்றன.

தமிழையுலவாது தழைப்பிப்பனவும் பழங்காவியங்களே யென்பதற்குப் பழங்காவியப்பயிற்சியொழிந்தமையால் மலைநாட்டிற்றமிழ் மொழி சிதைந்து பிறிதுமொழியாகி மாறியிருத்தலும், தமிழ்நாடல்லாத பிறநாட்டகத்தும் பழங்காவியப்பயிற்சியுள்ளார்மாட்டுத் தமிழ்மொழி செப்பமுற்றிருத்தலும், தமிழ்நாட்டும் அப்பயிற்சி குன்றியவிடங்களிற் றமிழ்மொழி சிதைந்துபட்டுவருதலும் சான்றாகின்றன.

வடமொழியும் காவியங்களின் ஆற்றலாலன்றோ பேசுவாரன்றியும் நிலைபெற்றிருக்கிறது.

காவியங்களின் ஆற்றலையுணர்ந்தே வங்கதேசத்தார் ஸ்வபாஷாபிவிருத்தியின்பொருட்டு "வங்கீய சாஹித்தியபரிஷத்" என ஒரு சங்கங்கூட்டிப் புதிய காவியங்களைச்செய்து தேசபாஷையை வளர்த்துவருகிறார்கள். நம் தமிழ்மொழிக்கு அவ்வாறு புதிய காவியங்கள் செய்துகொள்ளவேண்டுமென்பதின்றியே, ஒருவராயுளுள்ளளவும் படித்துமுடித்தாலும் முடிவுபெறாத பழங்காவியங்கள் நிரம்பியுள்ளன. பாஷாபிமானமுள்ள பலரும் அவற்றைப்பயிலலும் பயிற்றலும் புரிந்துவருவாராயின் அவையே தமிழ்மொழி வளர்ச்சிக்குப் போதிய சாதனமாகும்.

இக்காலத்துக்கு வேண்டும் புதிய காவியங்களியற்றப்புகுவோரும் பழங்காவியங்களைப் படித்து அவற்றின் போக்கையுணர்ந்து அந்நெறிபற்றிச் செய்வாராயின் அக்காவியங்கள் அவருக்குப் புகழையும் புண்ணியத்தையும் விளைத்து உலகிற்கு உபகாரமாகுமென்பதுணரத்தக்கது.

பத்திராதிபர்.

---

உ

சிவமயம்.

# ஆன்மபோதம்.*

இது ஆன்மா+போதம் என்னும் இருமொழிகள்சேர்ந்த ஆரும் வேற்றுமைத்தொகைத் தொடர்மொழி. முதலாவதாய் நின்ற ஆன்மா என்னுஞ்சொல் ஆன்ம என்று அதனிறுதிகுறுகிநின்றது. இது ஜீவான்மா பரமான்மா இரண்டிற்கும்பொதுவாயதோர்சொல். ஜீவான்மாவை ஆன்மா எனக்கூறுதல் சித்தாந்தமும் பரமான்மாவை ஆன்மா எனக்கூறுதல் வேதாந்தமுமாம். இதனை,

"ஒன்றென மறைகளெல்லா முரைத்திட வுயிர்களொன்றி
நின்றன னென்றுபன்மை நிகழ்த்துவ தென்னையென்னின்
அன்றவை பதிதா னொன்றென் றறையும்."

என்ற சிவஞானசித்தித்திருவாக்கானும் இதற்கு மாதவச் சிவஞான யோகிகள் அருளிய உரையானும் தெளிக. ஈண்டுச் சித்தாந்த வழக்கின்படி ஆன்மசப்தத்திற்கு ஜீவான்மாவே பொருளாம். வேதாந்த வழக்கின்படி நேர்ந்துழிக்கூறுதும். இனி இரண்டாவதாய் நின்ற போதம் என்னும் சொல் ஞானம், (அறிவு) என்னும் பொருளதாம். ஆகவே ஆன்மபோதம் என்னும் தொடர்மொழிக்கு வேற்றுமை யுருபை விரித்துக்கூறுமிடத்து "ஜீவான்மாவினது ஞானம்" (அறிவு) என்பது பொருளாம்.

இனி ஜீவான்மா இதுவென்றும், அதன் அறிவு இத்தன்மைத் தென்றும், அவ்வறிவு செல்லுமிடங்கள் இவை என்றும், அவற்றால் ஆகும்பயன் இவை என்றும், செல்லவேண்டியது இதுவென்றும் ஐந்துவகையாகப் பிரித்து முறையே விரித்துக்கூறுதும்.

---

* இது மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பதினொன்ருவது வருடபூர்த்தியில் டிப்டி கலெக்டர் ஸ்ரீமான் ஆறுமுகம்பிள்ளை அவர்கள் அக்கிராசனத்தில் உபந்நியாசிக்கப் பெற்றது.

காணப்படுகின்றஉலகமும் உடலுமாகியபிரபஞ்சப்பொருள் ஒன்று. பிரபஞ்சமெனினும் பாசமெனினும் ஒக்கும். உடல்தோறும் யான் என்னும் சொல்லிற்குப் பொருளாயும், உடலைத் தற்கிழமையாய் யான் என்பதோடமையாது பிறிதின்கிழமையாயும் எனதென்று கூறுவ தால் உடலின் வேறாயும், அறிவுடையதாயும் உள்ள ஜீவான்மாவென் னும் பொருள் ஒன்று. ஜீவான்மா எனினும் உயிர் எனினும் பசு எனினும் ஒக்கும். இவற்றுள், முன்னையதும் இறுதியதும் வட மொழி. நடுவணது தென்மொழி. இவ்வுயிர் வேண்டியதொன்றைப் பெறுமலும் வேண்டாததொன்றைப்பெறுதலும் ஒரோவழி எண்ணிய எண்ணியபடி எய்துதலும் காண்கின்றமையின் உயிரின் வேறாய் உயிருக்குயிராய் நின்று உயிர்களின் கன்மத்துக்கீடாக இவ்வாறு செய்விப்பான் வேண்டப்படும் இறைப்பொருள் ஒன்று. இறை எனி னும் பதி எனினும் ஒக்கும். ஆகப்பொருள்கள் மூன்றுண்டென் றறியத்தக்கது.

இம் முப்பொருள்களுட் பதியாகிய பரமான்மாவும் ஜீவான்மாவும் சித்துப்பொருளாயினும் பரமான்மாவின்முன் பிரபஞ்சம் முளைத்து நில்லாமையால் அதனைப் பரமான்மா சுட்டி அறியாது. பிரபஞ்சம் சடமாதலால் பரமான்மாவை அறியாது. இவ்விருபொருளும் இவ் வாறு சூரியனும் விடயமும்போல ஒன்றனையொன் றறியாதாகவே அறியாதபொருள் பயப்பாடிலவாய்ச் சூனியமெனப்பட்டு வழுவாமாக வின் சூரியனையும் விடயத்தையும் அறியுங்கண்போல இவ் விரண்டனை யும் அறிவதாய் இரண்டின் வேறாயுள்ள பொருள் ஒன்று வேண்டப் படும். அதுவே ஈண்டெடுத்துக்கொண்ட ஆன்மசப்தத்திற்குப் பொரு ளாகிய நடுநின்ற ஜீவான்மாவாம். இக் கருத்தினை,

"யாவையுஞ் சூனியஞ்சத் தெதிராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா."

என்னும் சிவஞானபோதம் ஏழாஞ்சூத்திரத்தான் இனிதுதெளிக. இவ் வான்மா ஒன்றைப்பற்றி அறியுந் தன்மையால் தூலசித்தெனப் படும். பரமான்மா தனித்தறியுந்தன்மையால் சூக்குமசித்தெனப் படும்.

ஜீவான்மா அறியப்படுமோ படாதோ? படுமெனின் "இருதிற னறிவுளதென்றல்" பொருந்தாதாய் மூன்றனையும் அறிவதென்னல் வேண்டும். படாதென்னின் மேற்கூறியவாறு பயப்பாடின்றிச்சூனிய மெனப்பட்டு வழுவாம். ஆதலின் மலரின்கண் வாசனையானது மலர் போல விளங்கித்தோன்றுமலும் சூனிய மல்லாமலும் மலரின்கண் அடங்கித்தோன்றுவதுபோலப் பரமான்மாவாகியசத்தையும் பிரபஞ்ச மாகிய அசத்தையும்போலத் தனித்தறியப்படாததாய் அவ் விரண் டனையும் அறியுமுகத்தான் அறியப்படுவதாம். சத்தசத்தாகிய இரண் டனையும் அறிதற்கு உரிமையுடையதாதலின் ஆன்மா சதசத்தெ னப்படும். இதுகாறும் ஆன்மா இதுவென்று கூறப்பட்டது.

இனி அதன் அறிவு இத்தன்மைத்தென்பது வருமாறு. கண்ணினி டத்துள்ள ஒளி தானே ஒன்றனை அறிவதின்றிச் சூரியன் சந்திரன் அக்கினிமுதலியவற்றின் ஒளியினைத்துணையாகக்கொண்டு விடயங் களை அறியுமாறுபோல ஆன்மாவினிடத்துள்ள அறிவு தானேயொன் றனை அறிவதின்றிப் பரமான்மாவாகிய இறைவன் அந்தரியாமியாய் நின்று கருவிகளைக்கூட்டியுந் திருவருளைக் கூட்டியும் அறிவிக்க அறி யும். கண் ஒளியோடுகூடி ஒளியாய்நின்று அறிந்தும், இருளோடுகூடி இருளாய்நின்று அறிதல் வியாபாரமின்றியும் இருப்பதுபோல ஆன் மாவும் அறிவிக்கும் துணையோடுகூடி அறிவாய் அறிந்தும், அறியா மையைச் செய்வதோடுகூடி அறியாமையாய் அறிவு தொழிற்படா மலும் இருக்கும். அறியாமையோடு நிற்கும் அவதரம் கேவலம் என்னப்படும். அறிவோடு கூடிநிற்கும் அவதரம் சகலமெனவுஞ் சுத்தமெனவும் இருதிறப்படும். அங்ஙனம் அறியுங்காலத்தும் ஒன் றனை அறியுங்காற் பிறிதொன்றனை அறியாது. இதுபற்றியே, சார்ந் ததன் வண்ணமாய் நின்றறியுமென்பர். சகலத்தில் நின்றறியும் பொழுது அறிவிக்கும் துணை பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என முத்திறப்படும். சுத்தத்தில் நின்று அறியும்பொழுது அறி விக்குந்துணை திருவருள். சகலத்தில் அறியப்படும்பொருள் பிரபஞ் சம். சுத்தத்தில் அறியப்படும்பொருள் பதி. இதுகாறும் அறிவு இத்தன்மைத்தென்று கூறப்பட்டது.

இனி அறிவு செல்லுமிடங்கள் வருமாறு:—கேவலத்தில் ஆணவ மலத்தால் அறிவு தொழிற்படாமல் கண்ணில்லாக்குழவி இருட்டறை

பிற் பட்டுழல்வதுபோல் வருந்தும். அங்ஙனம் வருந்தும் ஆன்மா விற்கு இறைவன் கிருபையினுல் இரங்கிக்குருடனுக்குக் கோல்கொடுப் பதுபோல் மாயையினின்றும் சரீரத்தைக்கொடுப்பன். சரீரத்தைப் பெற்றபொழுது சகலம். இதில் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் எனப்படும் மூன்றனையும் துணையாகக்கொண்டு விடயங்களை அறியும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இந்திரியங்களைத் துணை யாகக்கொண்டு விடயங்களை இஃது யாதோ ஒன்று தோன்றுகின்ற தென நிருவிகற்பமாய் அறியும்ஆன்மாவின்அறிவு இந்திரியப் பிரத்தியட்ச அறிவு. அந்தக்கரணங்களுடன்கூடிப் பெயர் சாதிமுதலிய வற்றுல் விடயங்களைப் பகுத்தறியும் ஆன்ம அறிவு மானதப் பிரத்தி யட்ச அறிவு. அறிந்தவிடயங்களில் விருப்பு வெறுப்புற்றுத் தன் மாட்டு நிகழ்வது தன்வேதனைப்பிரத்தியட்ச அறிவு. நேராக வின்றிப் பிறிதோரிடத்துள்ள பொருள்களையறிவது யோகப்பிரத்தி யட்ச அறிவு. இந் நான்கும் பிரத்தியட்சம் என்னும் பிரமாணத்தைக் கொண்டு ஆன்மாவின்கண் நிகழுமறிவு.

தெரிந்த பொருள்களைக்கொண்டு அதனேடு தொடர்புடைய தெரியாத பொருளை ஆன்மா அறிவது அனுமான அறிவு. அதாவது புகையைக் கண்டவிடத்து அதுகொண்டு அக்கினி ஆங்குண்டென் றறிவதுபோலென்க.

தெரியாத தேவலோக நரகலோகங்களை ஆகமவழியாக உண் டென்றறியும் ஆன்ம அறிவு ஆகம அறிவு. இவ்வுலகத்தும் தெரியாத தொன்றைத் தெரிந்தவன் சொல்லக்கேட்டறிவதும் ஆகம அறிவு ளடங்கும். ஆகமம் என்பது ஆப்தவாக்கியம். அது பரமாப்தனுகிய இறைவன் அருளிச்செய்த வாக்கியத்தைச் சிறப்புப்பொருளாய்க் குறித்து நிற்கும்.

இவ்வாறு பூமி, சொர்க்கம், நரகமாகிய மூன்றுலகப்பொருள்களை அறியுமான்மா இப் பொருள்களின் நிலையாமையை யுணர்ந்து நிலை யுடைப் பொருள் இதுவெனத் தேறுமாற்றலின்றி அதனை நூல்க ளால் துணிவுபெறத் தெளியவெண்ணி நூலாராய்தல் கல்வி அறிவு என்னும் ஆகம அறிவு.

நூற்பொருளைச் சந்தேக விபரீதமறப் பிறர்பாற்கேட்டுத்தெளிவது கேள்வியறிவு என்னும் ஆகம அறிவு. கல்விகேள்விகளாலன்றி உலகம் தோன்றி நின்றொடுங்குதலை அனுபவமாய்க் கண்டுணர்வது பிரத்தியட்ச அறிவு.

குடத்தைக் கண்டமாத்திரத்தில் இது தோன்றுவதற்கு முதற் காரணமாகிய மண்ணும் உபயோகிப்போரின் பொருட்டுச் செய்விப்பவனாகிய குயவனும் உண்டென்றறிவதுபோல, உலகத்தைக்கண்டமாத்திரத்தில் இது தோன்றுவதற்கு முதற்காரணமாய் ஒருபொருளும் நிமித்தமாய்த் தோற்றுவிப்பானொருவினைமுதலும் வேண்டப்படும். படவே அவை முறையே மாயையும் ஆன்மாவின் நிமித்தமாகிய இறைவனுமெனப் பதி பசு பாச மூன்றும் உண்டென்றறிவது அனுமான அறிவு.

இவ்வாறுண்டென்றறிந்த முப்பொருள்களின் இலக்கணங்களையும் அவற்றுள் பாசத்தின் நிலையாமையினை ஆன்மா உணர்ந்து அதனைவிட்டுப்பதியையடையுமுபாயமாகிய சாதனத்தையும் பதியைப் பசுவடைந்தபோதுள்ள அனுபவநிலையையும் நூல்களால் அறிவது ஆகம அறிவு. காணப்படாத முப்பொருள்களின் சம்பந்தமான பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என்னும் இம்மூன்றறிவுகளையும் ஆராய்ச்சியறிவு என்றும் கூறுவர். இதுவரை சகலம். இனிச் சுத்தம்.

இங்ஙனம் உணர்ந்தவான்மாவானது பாசத்தைநீக்கிப் பதியுடன் கலந்துநிற்றலை அனுபவமாய் அறியவிரும்பி அது ஆராய்ச்சியறிவாலாகாதெனத் துணிந்து அதுகூடுமுறையைச் சிவானுபவமுள்ள தேசிகராற்பெறச் சிந்தித்து மிக்க பசியுடையவன் உணவைநாடுவது போல் நாடி நல்லாசிரியரை அடைந்து அவர்மனங்கசியப் பணிவிடைசெய்து அவர் அருளுபதேசத்தைப்பெறல் ஆகம அறிவு. குரு ஆப்தரானதால் அவருரை ஆகமமெனப்பட்டது.

அவ் வுபதேசத்தில் உறைத்துநின்று சாதிப்பதாகிய சிந்தித்தல் அனுமான அறிவு. உபதேசமாகிய காணப்பட்டதொன்றைக்கொண்டு உபதேசத்தோடியைபுடைய அனுபவநிலையை அப்பிரத்தியட்சமாய்க்

காண்டலின் அனுமானஅறிவெனப்பட்டது. இந்நிலை சவிகற்ப நிட்டை. இதனைச் சாதன அறிவென்றும் கூறுவர்.

இவ்வாறு சாதித்தவழிப் பாசம்அறவேநீங்க அருளைத் துணையாகக்கொண்டு ஆன்மா பதியுடன் கலந்து பதிவேறு ஆன்மாவேறெனப் பிளவுபடநில்லாது அத்துவிதமாய் நிற்றல் அனுபவ அறிவென்னும் சிவப்பிரத்தியட்ச அறிவு.

இந்நிலையிற் பதியேயன்றி ஆன்மா இல்லையென்பர் ஒரு சாரார். பதியும் ஆன்மாவும் பாசமும் உண்டென்பர் மற்றொருசாரார். இவ்விருவர் கருத்தும் பொருந்தாது. என்னை? கட்டையினிடத்துப் பசுமையும் அக்கினியுமிருக்கின்றன. பசுமை மேற்பட்டிருக்கும்பொழுது அக்கினி தோன்றுவதில்லை. அக்கினி மேற்பட்டிருக்கும்பொழுது பசுமை தோன்றுவதில்லை. பசுமை மேற்பட்டிருக்கும்பொழுது பசுமையாயும், அக்கினி மேற்பட்டிருக்கும்பொழுது அக்கினியாயும் கட்டையிருக்கும். பசுமையாயிருக்கும்பொழுது அக்கினி அடங்கியிருக்கும். அக்கினியாயிருக்கும்பொழுது பசுமைகெட்டு கட்டை பொருட் கெடுதலின்றித் தன்மைகெட்டு நிற்கும். பசுமை பாசத்துக்கும் கட்டை பசுவுக்கும் அக்கினி பதிக்கும் உவமை. இதுபோற் பாசங்கெட்டு ஆன்மா பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம்பெற்றுச் சிவமாய் நிற்குமாதலின் ஒன்றென்பதும் பாசங்கெட்டொழிதலால் மூன்றென்பதும் கூடாதாதலினென்க.

இவ்வாறாகவும் முத்தியில் ஒன்றென்று வேதாந்தமும் மூன்றென்று சித்தாந்தமும் கூறுகின்றதென்னையோவெனின் பதியும் ஆன்மாவும் பிளவுபடப் பிரிக்கமுடியாத ஒற்றுமைநயம்பற்றி ஒன்றென்று வேதாந்தத்திற்கும், பாசங்கெட்டொழிதல் முத்திக்குச்சிறந்த ஏதுவாதல்பற்றி மூன்றென்று சித்தாந்தத்திற்கும் கருத்தாதலாலென்க. பாசம் ஏனைப் பெத்தரிடத்திலிருப்பதால் நித்தத்திற்கும் இழுக்கில்லை. இதுபற்றிய சங்கை உத்தரங்கள் ஈண்டு விரிப்பிற்பெருகுமென்றஞ்சி விடுக்கின்றாம்.

ஆன்மாவின் அறிவு துணையை இன்றி அறியமுடியாதென்பது யாண்டுஞ் செல்லுமாதலின் அருள்துணையாய்க்கொண்டு பதியை

யடையுமெனவும்,சிவம் அநுபவமாய் விளங்குதலின் சிவம்பிரத்தியட்சம் எனவும் கூறப்பட்டது. பெத்ததெசையிலும் ஆன்மாவுடன் சிவம் கலந்து மறைந்துநின்று முத்திதெசையில் விளங்கிநிற்குமாதலின் சிவப்பிரத்தியக்ஷ அறிவை இயற்கையறிவென்றும், விட்டு நீங்குதல் பற்றி ஏனையவெல்லாம் செயற்கையறிவென்றும் கூறப்படும். இது வரை அறிவு செல்லுமிடங்கள் இவை என்று கூறப்பட்டது.

இனி அவற்றாலாம் பயனும் செல்லவேண்டுமிடமும் வருமாறு:- உலகப்பொருள்களினறிவால் பிறந்திறந்துழலுதலும், கல்வி அறிவு முதல் சிந்தனையறிவு ஈறாக எல்லா அறிவாலும் பிறவி நீக்கத்துக்கேதுவாதலும், சிவப்பிரத்தியக்ஷ அறிவாற் பிறப்பிறப்பு நீங்கிப் பேரின்பமெய்துதலும் பயனாம்.

ஆதலின் பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்ற ஆன்மா உலக அறிவுகள் இவையெனக் கண்டுகளித்துக் கல்வியறிவுமுதல் முறையே ஒவ்வொன்றாகப்பற்றி அவற்றின் முதிர்ச்சியாற் சிவப்பிரத்தியட்சஅறிவினை யெய்திநிற்றல்வேண்டும். இதுவே ஆன்மபோதத்தினுண்மையாம். இவ்வான்மபோதத்தினையே சர்வஞானோத்தரமுதலிய சிவாகமங்கள் மிகப்பாராட்டிக்கூறுகின்றன. ஆதலின் இவ்வரும்பெரு நிலையைப்பெற்று இன்புறுதற்கு ஒவ்வொருவரும் முயலவும் அம்முயற்சி முற்றுப்பெறுதற்கு இறைவன்றிருவருள் துணைநிற்கும்வண்ணம் இறைவனைப்பிரார்த்திக்கவும் செய்வோமாக.

## முடிபுரை.

எடுத்துக்கொண்டவிஷயம் ஆன்மபோதமென்பதூஉம், இது இருமொழிகள்சேர்ந்த வேற்றுமைத்தொகைத் தொடர்மொழி என்பதூஉம், ஆன்மசப்தம் பரமான்மா ஜீவான்மா இரண்டிற்கும் பொதுவென்பதூஉம், அவ்வாறு கூறுவது முறையே வேதாந்தமும் சித்தாந்தமுமாமென்பதூஉம், ஈண்டுச் சித்தாந்த வழக்கின்படி ஜீவான்மாவே பொருளாமென்பதூஉம், போதம் அறிவு என்பன ஒருபொருட்கிளவி என்பதூஉம், ஆன்மா, அறிவு, செல்லுமிடங்கள், பயன், செல்லவேண்டுமிடம் என இவ்விஷயத்தை ஐவகையாய்ப்பிரித்துக் கொள்ளப்படுமென்பதூஉம், உடலின்கண் யான் என்னும் சொற்

குப்பொருளாய் நிற்பது ஆன்மாவென்பதூஉம், இது பொருளைப பற்றிநிற்கும் உரிமையால் தூலசித்தெனப் பெயர்பெறுமென்ப தூஉம், இதனறிவு பாசத்தையும் பதியையும் அறியுமென்பதூஉம், அறியுங்காற்கண்போல் துணைகொண்டு அறியும் என்பதூஉம், பாசத்தையறியுங்கால் பிரத்தியட்சம், ஆகமம், அனுமானமென மூன்றுந் துணையாமென்பதூஉம், இவற்றைக்கொண்டறியும் உலகப்பொருள்களின் இன்பம் நிலையல்லவெனக்கண்டு நிலையான இன்பத்தையுடைய பதிப்பொருளையடையவெண்ணி அடைய முயலுங்காலுண்டாம் அறிவு, கல்வியறிவு, கேள்வியறிவு, உபதேசஅறிவாகிய ஆகம அறிவு, சிந்தனை அல்லது சாதனமென்னும் அனுமான அறிவு, அனுபவமென்னும் சிவப்பிரத்தியக்ஷ அறிவு எனப்பலவகைப்படுமென்பதூஉம், சிவப்பிரத்தியக்ஷ அறிவே பேரின்பம் பயக்குமாதலின், ஏனையவற்றை விட்டு இதனையே அடையவேண்டுமென்பதூஉம், இதுவே ஆன்மபோதத்தின் உண்மைப்பொருளாமென்பதூஉம் பிறவுமாம்.

பொ. முத்தய்ய பிள்ளை,
சாதன சாத்திர போதகாசிரியர்,
சிவாநுபூதிச் சித்தாந்த சங்கம்,
தூத்துக்குடி.

---

## வறுமையிற் செம்மை. *

"இன்மையினின் னாததியாதெனினின்மையி
னின்மையேயின் னாதது."—திருக்குறள்.

வறுமையின் கோடுமை.

வறுமை, இன்மை, மிடி, நல்குரவு என்பன ஒருபொருட்சொற்கள். நல்குரவு என்பதற்கு நுகரப்படுவனயாவு மில்லாமையெனப் பொருள் கூறுவர் பரிமேலழகர். மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐந்துறுப்புக்களானும் நுகரப்படும் பொருள்கள் பல

---

* இது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதினொன்றுவது வருடக்கூட்டத்திற் படிக்கப்பெற்றது.

வகைப்படுமேனும் வாயானுகரப்படும் உணவுப் பொருளின்மையே அறக் கொடிய வறுமையாகக் கொள்க. பிறபொருள்களில்வழியும் உயிர்வாழ்தல் கூடும். உணவில்வழியோ உயிர்வாழ்ந்திருத்தல் முடியாது. உயிர்க்கிடமாகிய உடம்பு உணவின் நலத்துக்கேற்பப் பருத்து வளர்தலும், உணவின் சுருக்கத்துக் கேற்ப மெலிந்து சுருங்கலும், உணவு இல்லாதாக இறந்து படுதலும் யாவரும் கண் கூடாகக் கண்டறிந்த விடயமே. இதனாலன்றே உண்டியை ஆருயிர் மருந்து எனவும், உண்டி கொடுத்தாளை ஆருயிர் மருத்துவி எனவும் மணிமேகலையிற் பலவிடத்திற் கூறுவாராயினர்.

> ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்து"
> ஆருயிர் மருந்தா லகனில முய்யும்"
> அன்னை கேணீ ஆருயிர் மருத்துவி"
> உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே."

என்பனவாதியவற்றால் உயிரைப் பாதுகாப்பது உணவேயென்பது பெறப்படும். இஃதென்னே! வறட்காலத்தே உணவின்பொருட்டு மானமிழந்த மங்கையர் பல்லோர். புதல்வரை விற்ற பூவையர் பல் லோர். தின்னாதனவெலாம் தின்றவர் பல்லோர். சோறு சோறென்று துடித்தவர் பல்லோர். உணவில்லா திறந்தொழிந்தவர் பல்லோர். இனையரைக் கணிப்பிட வெவராலாகும். விஸ்வாமித்திர முனிவர் பசிப் பிணி பொறாது நாயூனைத் தின்னமுயன்றதை மனுஸ்மிருதி 10 - ம் அத்தியாயம் 18-வது சுலோகத்தானும்,

> "புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
> மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலின்
> அரசுதலை நீங்கிய வருமறை யந்தணன்
> இருநில மருங்கின் யாங்கணுந் திரிவோன்
> அரும்பசி களைய வாற்றுவது காணான்
> திருந்தா நாயூன் றின்னுத லுறுவோன்."

என்னும் மணிமேகலையானும் அறியலாமன்றோ?

> "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
> தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
> பசிவந் திடப்பறந்து போம்."

என்று பண்டைப் புலவர் கூறியதை யனுபவத்தானே பஞ்சகாலத்தில் நெஞ்சுறக் கண்டாமன்றே.

உயர்குடிப் பிறந்தோர் தாழ்குடிப் பிறந்த செல்வர்பாற் பணி புரிந்து தாழ்வதும், நல்லொழுக்கமுடையார் கூடாவொழுக்கத்தினர்க்கு வேண்டுவன செய்து அவர்பணி கேட்டு வாழ்தலும், கற்றறிவுடையார் கல்லாதாரைப்பின்பற்றிப்புகழ்ந்து அவரிடம் பிச்சைப்பொருளை எதிர் பார்த்தலும், இன்னோரன்ன பிறவும் வறுமையா லன்றோ நிகழ்வவாயின !

“ குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி.”

என்பது பொய்யன்றே. இதில் வறுமையின் கொடுமையை நன்கனுபவித்துச் சகிக்கலாற்றாது துள்ளித் துடித்து வயிற்றெரிச்ச லதிகரித்தமையா லன்றோ பசிப்பிணி யென்னும் பாவி என இழித்துக் கூறுவா ராயினர்.

தக்கவின்ன தகாதனவின்னவெனப் பகுத்துணர்த்தி நல்லறிவுச்சுடர்கொளுத்தி விழுமியது பயக்கும் இலக்கிய இலக்கண ஆராய்ச்சியிற்சிறந்து விளங்குவார்களே யாயினும் அவர்பால் நல்குரவு தோன்றுமாயின் அறிவு மழுங்கி இருண்ட சிந்தையராவர்.

இதனை—“செல்வர் மனத்திணேங்கித் திருவின் மாந்தர்நெஞ்சின், எல்லையிருளிற்றகி.........,”

என்னும் திருத்தக்கதேவர் மொழியானும்,

“விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புண ருடம்பிற் றோன்றியென்
அறிவுகெட நின்ற நல்கூர்மையே.”

என்னும் புறப்பாட்டானும் காணலாம். அன்றியும், வறுமையின் கொடுமையைப்பற்றித் தனியாக ஓரதிகாரம் வகுத்துரைத் தருளிய

பொய்யில்புலவர் அம்மட்டிலமையாது அறிவைக்கொல்லும் வறுமையின் கொடுமையை "பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை--நிச்ச நிரப்புக்கொன் றாங்கு" எனப் பிறிதோ ரதிகாரத்துள்ளும் உவமைவாயிலாக எடுத்துக்கூறி வலியுறுத்துவாராயினர்.

வறியர் தமக்கே யுணவின்றி வருந்துவாராதலின் விருந்துவரக் கண்டக்கால் அவரை வரவேற்று உபசரித்து நன்றாற்றற் கியலாமை பற்றி அவர் வரவுக்கு எதிர்தோன்றாது ஒளித்துக்கொள்வார் என்பதும்,இதனானே வறியவர்க்குச் சுற்றத்தாரில்லை யென்பதும் மேலே காட்டிய "விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கை" என்பதனானும் "நல்கூர்ந்தார்க்கில்லை சுற்றம்" என்னும் திருத்தக்கதேவருரையானும் பெறப்படும்.

இவ்வுலகத்திற் பொய் களவு முதலிய பாவச் செயல்களையெல்லாஞ் செய்யத்தூண்டி இம்மை, மறுமை யிரண்டையுங் கெடுத்து ஆழிவாய்த் துரும்புபோல மனத்தை ஆட்டி வாட்டுவது வறுமையொன்றேயாம். இதுபற்றி யன்றோ,

"நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்." எனத் தேவரும்,

"கோடிது கோடிது வறுமை கோடிது" என மூதாட்டியாரும்,

"தரித்திரங்கோடிய வேவற்றினுங்கோடிது"எனப்பிற்காலத்தாருங் கூறுவாராயினர். அன்றியும்,

"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென்
றல்லல் நீத்த வுவகை நான்கே."

என உவகைச் சுவைக்குச் செல்வத்தை முதற்கட் கூறிய ஆசிரியர் தொல்காப்பியனார்,

"இளிவே யிழவே யசைவே வறுமையென
விளிவில் கொள்கை யழுகை நான்கே."

என அழுகைச் சுவைக்கு வறுமையைப் புணர்த்துரைத் தருளினர். வறுமையைக் கூறியபின்னர் அழுகைச்சுவைக்குப் பிறிதொன்றுங்

கூறவேண்டா வென்பது தோன்றவே நான்கனுள்ளும் வறுமையை யிறுதிக்கண் வைத்துரைத்தனர் போலும்.

சொல்லாதன சொல்லிக் கேளாதன கேட்டுச் செய்யாதன செய்து உண்ணாதன உண்டு நிலப்பொறையாக உயிர்சுமந்துழலப் புரியும் வறுமையின் கொடுமை இனைத்தாகலின் வறியராயினோர்க்கு எக்காலத்தும் துன்பமனுபவித்தலே யன்றி உய்தி கூடுதலில்லையோ வென்றாராய்வாம்.

வறுமைப் பிணிக்கு மருந்து:—

நல்கூர்ந்தாருள் எப்பொழுதுங் கவலைக்கே கொள்கலனாகி நன்மை தீமை யறியாது களவு முதலிய தீச்செயல்களியற்றிப் பொருள்பெற்றுத் தம் வறுமையை நீக்கக் கருதுவா ரொரு சாரார். களவினாகிய வாக்கம் அளவிறந், தாவது போலக் கெடு மாதலின் இன்னோர் வறுமைத்துயருடன் மானமழிதலும் சிறைப்படுதலும் ஆகிய பல வகைத் துன்பத்துக்கே யாளாகுவர்.

தீய செயல்களான், ஒரோவழிச் செல்வம்பெற்று வறுமை நீக்க மெய்தி வாழ்தல் கூடுமாயினும், பழியொடுபட்ட செல்வத்தினும் முன்னுற்ற நல்குரவே சால நலந்தருவதாகும். பிறர் பழிக்கப்படாமையின் இதனை,

> "பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
> கழி நல்குரவே தலை."

என்பதும் வலியுறுத்தும்.

> "இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
> நடுக்கற்ற காட்சி யவர்."

> "ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை."

என்பவாகலின் வறுமையாற் பட்டினிகிடந்து மடியும்படி நேர்ந்தக்காலும் "புலி பசிக்கினும் புல்லருந்தாமை" போலத் தீச்செயல்களைச் செய்து பொருள்கொள்ளக் கருதாது நற்செயல்களைச் செய்து பெற்

றது சிறிதேயாயினும் அதையே பெரிதாக நினைத்து மனமகிழ்ந்து வாழவேண்டும்.

"பெற்ற சிறுகப் பெருத பெரிதுள்ளுஞ், சிற்றுயிர்க்கு ஆக்கம் அரிது" என்பது நாமறிந்த தொன்றன்றே! பிணியுடையொருவன் தக்க மருந்தை யருந்துவானுயின் அப்பிணி யொழிந்து சுகமுறுவன். மருத்துவ முறையறியார் கூற்றைக்கேட்டு நன்காக்கப்படாத மருந் தைக்கொள்ளின் முன்னைப்பிணி யதிகரித்தலன்றியும் பற்கட்டுக் கை கால் முடக்கமாதிய வேறு பல பிணிகளையுமெய்திப் பேரிடர்ப்படு வன். அதுபோலவே வறுமைப்பிணிக்கு மருந்தாக நற்செயல்களைக் கொண்டு நலமுறுமற்றீயவர் சேர்க்கையுற்றுத் தீய செய்யப் புகு வார்க்குப் பழியும் சிறையுமாதிய பல்வகைப் பெருந்துய ருளவாத லொருதலை. இதுபற்றியன்றே "தீவினைவிட் டீட்டல் பொருள்" எனவும் பெரியோர் கூறுவர்.

மற்றொரு சாரார் பொருளுடைப் பிறர்பால் இரந்துகொண்டு வாழப்புகுவார். தேளுக்கஞ்சிப் பாம்பின்வாய்ப் புகுவார் போல வறுமைக்கஞ்சி இரப்பத்துணிதல் மிகப்பெருந் துன்பத்துக்கே யிட மாவதன்றிப் பிறிதில்லை. இதனை, "இன்மை யிடும்பை யிரந்துதீர் வா மென்னும், வன்மையின் வன்பாட்ட தில்" என்பது வலியுறுத்தும். வறுமைப்பட்டுழியும் இரவாது வாழும் வாழ்க்கையானது செல்வர் வாழ்வினும் சிறந்ததென்பது முதியோர் கொள்கை. இதனை "இட மெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக், காலு மிரவொல் லாச் சால்பு" என்பதனுல் அறிக.

தீவழியீட்டலும் இரந்துகோடலும் விடுத்துத் தத்தமக்கியன்ற தோர் நல்லாற்றல் முயன்று அதனல் வருபொருள் சிறிதேயாயினும் பெற்ற சிறிதெனவும் பெருதபெரிதெனவும் வேண்டாது கிடைத்த பொருளையே மிகப்பெரிதாக மதித்து அதற்கியையச் செலவிட்டு மன வமைதியுடன் வாழ்வதே செல்வவாழ்வினும் பெருமிதமான நல்வாழ் க்கையாம். "ஆகாறளவிட்டி தாயினுங் கேடில்லை, போகாறகலாக் கடை" வருவாய் சிறிதாயினும் செலவு அதனிற் சிறுகக்கொண்டுழி வறுமைத்துயரென்பது சிறிதுமின்றன்றே. வறியோர்க்கழகு வறுமை

யிற்செம்மை என்பது இதுதான். செல்வமென்பதும் வறுமையென்பதும் மனத்தின் அமைதியும் அமைதியின்மையுமேயன்றிப்பிறிதுண்டோ? "நிறைநெஞ்சுடையானை நல்குரவஞ்சும்" என்றதன்பொருளை ஆராய்வாம்.

"போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து" என்றவாறு பெற்றது கொண்டு திருப்தியடைவானுக்கு நல்குரவு இல்லையென்பதன்றோ இதன் பொருளாவது.

"செல்வமென்பது சிந்தையினிறைவே
அல்காநல்குர வவாவெனப்படுமே"

என்பனவாய பேரறிவாளர் கூறும் வாக்கியங்களை மனத்திலழுத்தி அமைதியுறுதலே வறுமைப்பிணிக்கு மருந்தாகும். இந்த மருந்தாலன்றி வேறு எம்மருந்தாலும் இப்பிணி தீருவதரிது. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென்று அகமகிழ்பவரே செல்வராவாரென்க.

வறுமைக்குக்காரணம்:- முன்னைப்புண்ணியபாவத்துக்கேற்கவே இப்பிறப்பிற்செல்வமும் வறுமையும் பிறவியமைப்பாயெய்துமென்பர். "இலர்பல ராகிய காரணம் நோற்பார், சிலர் பலர் நோலாதவர்" புண்ணியஞ்செய்வார் சிலரும் அது செய்யாதார் பலருமாதலின், பலர் வறியராயுள்ளார் என்பது இதன்பொருள். இவ்வாறு கூறுவதுண்மையாயினும் பிறவிச்செல்வராயுள்ளார் பலர் இடையே தமது பெருஞ்செல்வமொழிந்து நித்தியதரித்திரராகி வாடுகின்றனரன்றே. இவரிவ்வாறு வறியராதற்கு இவரது மதியின்மையே காரணமாவதாம். நம் நாட்டில் நமக்கெதிரில் எத்தனை தனிகர் ஏழையாய்த்திரிகின்றனர். இவரெல்லாம் தங்கள் தங்கள் மதியீனத்தாற் செல்வமிழந்து வறியரானமையும் நாம் அறிந்துள்ளோம். கட்குடி, சூதாட்டம், காமம் முதலியவற்றாலே உடைமையெல்லாம் ஒழிந்துபோக இன்னது செய்வதென்றறியாது முன் தமக்குப் பணிபுரிந்தார்பால் தாம் பணிபுரிகின்றனர். சிலர் தம்பொருளி னளவறியாது தம்மினும் பெருஞ்செல்வர் செய்தவெல்லாம் தாமும் செய்யவேண்டுமென்று டம்பத்தாற் பொருளையிழப்பர். வரவுக்குமிஞ்சியே செலவே

இவரை வறுமையுட்படுத்தும். "வளவனாயினும் அளவறிந்தளித் துண்" என்றதை நம்மவரிற்பலர் கவனிப்பதேயில்லை. உற்றபொருளையிழத்தற்கு அறிவின்மையே காரணமாவதுபோலச் செல்வமுறுதற்கு அறிவுண்மையே காரணமாகும். இதனாலன்றே "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை,பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்பர் பெரியார்; ஆதலின் எதனையும் தெரிந்து செய்தால் வறுமையொழிந்து வாழ்தல் கூடும் என்பது முடிந்தபொருளாம்.

இங்ஙனம்,

**எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்,**

சோதுகுடி.

---

உ

கடவுள் துணை.

# முத்தகச் செய்யுட்டிரட்டு.

செந்தமிழ்ப் பத்திரிகையின்கண் முத்தகச்செய்யுட்டிரட்டெனத் தலையங்கமிட்டு ஒருதமிழ்நேயர் வெளிப்படுத்துவதோடு தமிழ்ப்பெருமக்கள் அனைவரையும் அவர்களிடம் உள்ள தனிச்செய்யுட்களையும் வெளிப்படுத்துமாறு விண்ணப்பஞ் செய்துள்ளார். ஆகையால் யானும் என்னிடம் உள்ள சில தனிப்பாக்களை ஈண்டு வரைகின்றேன்.

சுமார் 30 வருடங்கட்கு முன் ஏகசந்தக்ராஹி, முத்தமிழ்க்கும் சக்கரவர்த்தி, மாம்பழக் கவிச்சிங்கம் என்னும் பட்டப்பெயர்களைத் தாங்கிய புலவர் ஒருவர் இருந்தார். அவர் பாடிய நூல்களையும் தனிப்பாக்களையும் மார்க்கயன்கோட்டைப் பழநிச்சாமியாசாரியார் அச்சிட்டிருக்கின்றனர். அதன்கண் வராத சில பாக்களை நான் "சில தனிப்பாக்கள்" என்ற தலையங்கமிட்டுச் செந்தமிழ் Vol. 8. 523-வது பக்கத்தில் வெளியாக்கியுள்ளேன். மீதி அகப்பட்டிருக்கும் அப்புலவர்பெருமானுடைய செய்யுட்களையும் ஏனைய புலவர்களின் தனிப்பாக்களையும் இனித் தொடர்ச்சியாக எழுதிவருவேன்.

## சென்னை ஐக்கோர்ட் லாயர் குருமூர்த்தி அய்யரவர்கள் மீது பாடியது.

### விசித்திர உபயநாகபந்தம்.

### வெண்பா.

கோலகன வான்சென்னைக் கோரட்டு லாயரிய
லாலதிக நாகரிக னாகவரு—சீலமனு
நீததிட சாலிநிச வாசகனு மெங்கள்பெரு
வேத குருமூர்த்தி வேந்து.

பொய்யுங் கலியும் புறம்போம் புவிவியப்ப
மெய்யுந் திருவும் விளங்கிநிற்குந்—துய்யசென்னைக்
கோரட்டு லாயர் குருமூர்த்தி வள்ளல் கண்ணால்
ஏரிட்டுப் பார்த்தவுட னே.

---

### பழனி முத்துவீர பண்டாரத்தின்மீது பாடியது

திருவுலவு சிவகிரித் தெண்டா யுதக்குமர
தேசிகன் பதசேகரம்
ஜெயதவள சரஸ்வதி கடாக்ஷபரி பூர்ணரஞ்
சிதகலைக் ஞானபீடம்
திடவித்வ குலரத்ன தீபமெத் திசையுஞ்
செலுத்தும்பிர சங்கபுங்கம்
சேதுபதி சமுகமெச் சியமாம் பழக்கவிச்
சிங்கமெழு தியவாசகம்
மருவுலவு குவளைமணி மார்பன்மே ழித்துவச
வான்கங்கை குலகிரீடி
வாய்த்ததொன் னூற்றூறு கீர்த்திமான் சொன்னவுரை
மாறா வரிச்சந்திரன்
மந்த்ரபஞ் சாக்ஷர விபூதிருத் ராக்ஷசின்
மயபுனித சைவசீலன்
வளமைபா வியபழனி வளரானை யப்பமதி
மந்திரி தவத்துதித்த

தருவுலவு கரதல தயாளகன கர்ணவ
தாரகெம் பீரதீரன்
சரசசற் குணசுமுக முத்துவீ ரப்பதுரை
தனதுள மகிழ்ந்துகாண்க
சகலவித தாரதம் மியமுந் தெரிந்தவுத்
தமவில க்ஷணவிவேக
சாலியா னதினு லுமன்றியு நமக்குநல
தம்பிநீ யானதாலும்
கருவுலவு சிலசமா சாரமறி விக்கக்
கருத்திற் குறிப்புவைத்தோம்
கவிதையிது கொண்டுவரு மன்பனுற் காரியங்
களைவிசா ரித்தறிந்து
கருதிய படிக்குநிறை வேற்றுவது நின்கடமை
காலதா மதமொணுது
கண்ணையிமை காப்பது சுபாவமல் லாமலும்
கைக்கென்ன வுபசாரமே.

*N. B.*—மேற்கவிதையை நோக்குமிடத்து முத்துவீரபண்டாரமும் புலவர்பெருமானும் அந்தரங்க சிநேகிதர்களென்றும்,மாம்பழக் கவிச்சிங்கநாவலர் முத்துவீரபண்டாரத்தைத் தம்பி என்று அழைப்பது வழக்கமென்றும் தெரிகிறது.

---

மாம்பழக்கவிராயருக்கு நண்பரும், "தூய செந்தமிழின் சுவையெலாம் தெரிந்த" என்று ஷை கவிராயரே புகழ்ந்து பாடிய கோயமுத்தூர்ச் சுப்பராயமுதலியார் குமாரரும் ஆகிய C. S. சாமிநாதமுதலியார் என்பவர் ஒருவெண்பாவே மூன்று வெண்பா ஆகும்படிக்கும், ஒரு வெண்பா வண்ணத்தைப்போன்றிருக்கும்படிக்கும் பாடும்படி கேட்டுக்கொள்ளப் பாடியது.

ஒரு வெண்பா—மூன்று வெண்பா ஆக

அயில்வேலா நேயஞ்செ யத்தி நிறைநீர்
துயில்வருசீர் சேயசடைச் சுத்தா—செயவுமைதன்
றூயபுத்ரா மைத்தீர் சுகாதுங்கா வந்துபல
தேயர்தொழு மெய்த்தே சிகா.

இதுவே அடுத்தசீர் தொடுத்துப்படிக்கப் பிறிதொரு வெண்பாவாம்

நேயஞ்செ யத்தி நிறைநீர் துயில்வருசீர்
சேயசடைச் சுத்தா செயவுமைதன்—றாயபுத்ரா
மைத்தீர் சுகாதுங்கா வந்துபல தேயர்தொழு
மெய்த்தே சிகாவயில்வே லா.

திரும்பவும் அடுத்தசீர் தொடுத்துப்படிக்கப் பிரிதொன்றம்

அத்தி நிறைநீர் துயில்வருசீர் சேயசடைச்
சுத்தா செயவுமைதன் றாயபுத்ரா—மைத்தீர்
சுகாதுங்கா வந்துபல தேயர்தொழு மெய்த்தே
சிகாவயில்வே லாநேயஞ் செய்.

---

வெண்பா—வண்ணம்

அக்குமணி தாதகி யலர்த்தெரியல் பையரவு
கொக்கிறகு பாதிமதி கூவிளக—டுக்கைமலர்
சுத்தகங்கை யோடறுகு சுற்றிடு சடாமுடியில்
வைத்தகங்கை மீதுதுடி மான்.

(இன்னும் வரும்)

அ. சிதம்பர முதலியார்.

---

உ

# பாரத ரகசியம்.

(௨௧௬-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

எதனுல் புவனமானது தரிக்கப்படுகிறதோ அல்லது நிலைநிறுத்தப்படுகிறதோ அது தர்மமென்பது இலக்ஷணமாகும். ஆகாசமென்னும் பூதமானது எல்லாவற்றிற்கு மாதாரமாய் அவைகளை நிலையாக நிறுத்திக்கொண்டு அமைந்திருப்பதால் அது தர்மமென்னும் நாமத்தாற் குறிக்கப்பட்டுள்ளது. ஆகாசமானது சப்தத்தைக்குணமாக

வுடையது. ஆகாசத்தின் குணமாகிய சப்தத்தைக்குறிக்கின்ற யுதிஷ்டிரனைத் தர்மதேவதையின் குமாரனென்று சொல்லுவது பொருத்தமுள்ளதாகும். பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் மற்றவைகளை யதிக்கிரமிக்கச்செய்துவரும் சண்டையில் ஆகாசமும், அதன் குணமாகிய சப்தமும் விகாரமின்றி ஸ்திரமாயிருப்பதால் யுத்தத்தில் ஸ்திரமாயிருக்கிறவன் என்று பொருள்படுகிற யுதிஷ்டிர: என்னும் நாமத்தால் குந்தியின் மூத்தகுமாரன் அழைக்கப்படுகிறான். இரண்டாவது பூதமாகிய வாயுவுக்கு ஸ்பர்சமே குணமாகும். வாயு சலனத்துக்குக் காரணமாகவிருந்து ஒப்பற்ற வலிமையுடையதாகையால் அதன் குணமாகிய ஸ்பர்சத்தைக்குறிக்கின்ற குந்தியின் இரண்டாவது குமாரனை மஹா பலசாலியென்றும், பயத்தைச்செய்கிறவன் என்று பொருள்படுகிற பீமன் என்னும் நாமத்தையுடையவனென்றும் அழைக்கப்படுகிறது. மூன்றாவது பூதமாகிய அக்கினியானது இருளாகிய அசுரர்களை அழித்துப் பிரகாசரூபமாகிய தேவர்களுக்குத் தலைவனாக இருப்பதுபற்றி அப்பொருளைக்குறிக்கின்ற "இந்த்" என்னும் தாதுவிலிருந்துண்டான இந்திரன் என்னும் நாமத்தால் அழைக்கப்படுகிறது. அக்கினியின் குணம் ரூபம் ஆகையால் குந்தியின் மூன்றாவதுகுமாரனை அக்கினி அதாவது இந்திரனுடைய குமாரனென்றும், அவன் ரூபத்திற்சிறந்தவனென்றும் சொல்லுவது பொருந்தும். அர்ச்சுனன் என்னும் நாமமானது ராஜ் அல்லது சுசி என்னுந்தாதுவிலிருந்துண்டாகி விளக்குதல் அல்லது பிரகாசிப்பித்தல் என்னும் பொருளையுடையது. ஒவ்வொரு வஸ்துவையும் அது இன்னதென்று அதனுடைய ரூபமானது விளக்குவதால் விளக்குதல் என்னும் பொருள்படுகிற அர்ச்சுனன் என்கிறநாமத்தால் ரூபமானது குறிக்கப்படுகிறது. நகுலனென்னும் பதமானது ந+குலம் என்னும் இரண்டு அசைகளாலமைந்தது. குலமென்னுமசைக்கு இருப்பிடமென்று பொருள். நகுலன் என்னும் பதத்திற்கு குறிப்பிட்ட இருப்பிடமற்றது என்று பொருள் ஆகும். இரசமானது எப்பொருளிலும் நிறைந்துள்ளதாகையால் அதற்குக்குறிப்பாக ஒரு இருப்பிடம் சொல்லமுடியாததுபற்றி இரசமானது நகுலன் என்னும் பதத்தாற் குறிக்கப்படுகிறது. ஸஹதேவன் என்னும் பதமானது ஸஹ+தேவ என்னும் இரண்டசைகளாலமைந்தது. ஸஹ என்னுமசைக்குப்

பலமென்றுபொருள். கந்தமானது பலத்துக்கு ஆதாரமாகவிருப்ப தால் அது பலத்துக்கதிபதியென்று பொருள்படுகிற ஸஹதேவன் என்னும் நாமத்தாற்குறிக்கப்படுகிறது. ஆகவே சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்னும் அறுவிதத்தன்மாத்திரைகளையுடைய பஞ்சேந்திரியங்களும் முறையே யுதிஷ்டிரன், பீமன், அர்ச்சுனன், நகுலன், ஸஹதேவன் என்னும் ஐந்து பாண்டவர்களால் சங்கேத மாகக் குறிக்கப்படுகின்றனவென்று நன்கறியலாம். ஐந்து தன் மாத்திரைகளும் பஞ்சேந்திரியங்கள் உறையுமிடங்களில் உறைவது பற்றிப் பாண்டவர்கள் ஐவர்களும் வசித்த இடம் இந்திரப்பிரஸ்த மென்று அழைக்கப்படுகிறது. இந்திரப்பிரஸ்தம் என்னுஞ்சொல்லா னது இந்திரியத்தினுல் உணர்ந்தனுபவிக்கப்படும் இடமென்று பொ ருளுடையதாகும். பஞ்சேந்திரியங்களும் மனம் ஒன்றையே பற்றி நிற்கின்றன. மனத்தின் சம்பந்தமில்லாவிடில் இந்திரியங்களுக்கு எச்செயலும் பொருந்தாது. ஆகவே மனமானது ஒவ்வொரு இந் திரியத்திற்கும் ஸஹசரீ (Consort) ஆக அமைந்துள்ளது. அந்த மனமானது பாண்டவர்கள் ஐவர்களுக்கும் மனைவியான துரோப தையினுல் குறிக்கப்படுகின்றது. துரோபதையானவள் பாஞ்சால தேசத்தரசனுன துருபதமஹாராஜாவின் புதல்வியென்றும் அவள் பாஞ்சாலி கிருஷ்ணையென்கிற பெயர்களையுடையவளென்றும் சொல் லப்படுகிறுள். இப்பதங்களின் பொருள்களாவன:—

1. துருபத - ஊர்விக்கின்ற அல்லது சஞ்சலத்தையுடைய இட மென்று பொருளாகும். ஸம்சயமே மனத்தின் ஆவிர்ப்பாவமா யிருப்பதால் அந்த ஸம்சயமானது நிலையில்லாது மாறிக்கொண்டி ருக்கும் காரணம்பற்றி அதற்குத் துருபதமென்று ஸங்கேதமாகப் பெயர் கொடுக்கப்பட்டது. அதற்கெதிரிடையாகப் புத்தியின் ஆவிர்ப் பாவம் நிச்சயமாகும்.

2. பாஞ்சால - பஞ்ச என்றுல் ஐந்து. ஐந்து நிறைந்துள்ள தைப் பாஞ்ச என்று சொல்லப்படும். பாஞ்ச என்பதை உடையதெ ன்று பொருள் கொடுக்கக்கூடிய ஸஃ பிரத்தியயத்துடன்கூடிப் பாஞ் சாலமென்றுயிற்று. அதற்குப் பஞ்சேந்திரியங்களின் விகாரங்களை யுடைய ஸ்தானமென்று பொருள்.

3. பாஞ்சாலி - பாஞ்சாலமென்கிற பஞ்சேந்திரிய விகாரங்கள் நிறையும் இடமாகிய மனமென்று பொருளாகும்.

4. கிருஷ்ணை - இப்பதத்திற்கு இழுத்துக்கொள்ளுகிறவள் என்பது பொருள். நிர்யாணகாலத்தில் மனமானது இந்திரியங்களையும், விஷயங்களையும், பிறகு பிராணனனது மனத்தையும், பிறகு புத்திரூபனாகிய அத்தியக்ஷன் பிராணனையும், பிறகு ஆத்மா அத்யக்ஷனையும் இழுத்து முறையே தமக்குள் லயப்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்கிற வேதாந்த வசனப்படி மனமானது இந்திரியங்களையும் விஷயங்களையும் இழுத்துக்கொள்ளுவதால் அதற்கு கிருஷ்ண என்கிற பெயர் பொருந்தும். கிருஷ்ணையென்பது பெண்பால் விகுதியையுடையது. அம்முறையே புத்தி தத்துவமாகிய அத்தியக்ஷனைக்குறிக்கிற தேவகீ புத்திரனுக்குக் கிருஷ்ணன் என்கிற பெயர் பொருந்தியுள்ளது. புத்தியும் மனமும் ஒரே பொருளிலிருந்து ஆவிர்ப்பவிக்குங்காரணம்பற்றிக் கிருஷ்ணனுக்கும் துரோபதைக்கும் ஸஹோதரபாவம் சொல்லப்படுகிறது. ஒரு சமயத்தில் மனமானது ஒரு இந்திரியத்துடன் மட்டும் கலந்து விஷயத்தைப்பற்றுமே தவிர ஒரு இந்திரியத்துடன் மனங்கலந்து விஷயத்தைப்பற்றும்பொழுது மற்றொரு இந்திரியத்துக்கும் மனத்துக்கும் சம்பந்தமிருக்கவேமாட்டாது. அது வேறு ஒரு விஷயத்தைக்கிரகிக்கவும் மாட்டாது. இந்த இயல்பை ஸங்கேதமாகக் குறிப்பித்துத்தான் துரோபதையானவள் பாண்டவர்கள் ஐவர்களாலும் .ஏககாலத்தில் மனைவியாக உபயோகப்படுத்தப்படவில்லையென்றும் அவர்கள் முறையாக ஒவ்வொருவர் தனித்தனி ஒவ்வொரு வருஷத்தில் மனைவியாக உபயோகித்தார்களென்றும் கதையின் வரலாறு அமைந்துள்ளது.

ஒரு செயலைச்செய்வதற்கு மனமானது ஸங்கற்பஞ்செய்வதும் அந்தச்சங்கற்பத்தை இந்திரியங்கள் அல்லது கரணங்கள் நிறைவேற்றுவதும் இயல்பாய் அமைந்திருக்கும் தன்மைபற்றிப் பாரதயுத்தத்திற்காகச் சங்கற்பம் செய்தவள் துரோபதையென்றும் அதை நிறைவேற்றியவர் பஞ்சபாண்டவர்களென்றும் பாரதகதையமைந்திருப்பதைக்காண்க.

பாண்டவர்கள் ஐவரும் ஞானேந்திரியங்களைந்தையும் முறையே குறிக்கின்றபடி கர்மேந்திரியங்களைந்தும் அவர்களுடைய புத்திரர்களாகிய ஐந்து உபபாண்டவர்களால் குறிக்கப்படுகின்றன. மனமும் ஞானேந்திரியங்களும் லயமாவதற்கு முன்னமே கர்மேந்திரியங்கள் அடங்கிவிடுங்காரணம்பற்றித் துரோபதையும் பாண்டவர்களும் முடிவதற்கு முன்னுகவே உபபாண்டவர்கள் கொல்லப்பட்டார்கள் என்னுங்கதையும் பொருத்தமுள்ளதாம். புத்திரூபனுகிய அத்தியக்ஷன் மனத்துக்கும் இந்திரியங்களுக்கும் பிரேரகனுக இருந்துகொண்டு அவைகள் சரியான முறையில் பிரவர்த்திக்கும்படி ஏவிக்கொண்டுநிற்கிறபடி புத்திரூபனுகிய அத்தியக்ஷனைக்குறிக்கிற ஸ்ரீ கிருஷ்ணபகவானுனவர் துரோபதையையும் பாணடவர்களையும் சரியானமுறையிற்பிரேரணைசெய்துகொண்டு அவர்களுக்கு அனுகூலமாக இருந்தாரென்னும் பாரதகதை மிக்க பொருத்தமுள்ளதாகும். **𑌪𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌰𑌥𑌿** என்று ஸ்ரீ கிருஷ்ணபகவானை பாரதகதையானது சொல்லுவதற்கு முகாந்தரமென்னவென்ருல் பிருதிவி என்னும் பதத்தின் விகாரமாகிய பார்த்த என்னும் சொல்லுக்கு மண் அல்லது ஸ்தூலமென்று அர்த்தமாகும். உபநிஷத்தில்,

𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌰𑌥𑌿𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿
𑌶𑌰𑍀𑌰𑌂 𑌰𑌥𑌮𑍇𑌵 𑌤𑍁
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌤𑍁 𑌸𑌾𑌰𑌥𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿

என்று ஆத்மாவை இரதத்திலிருப்பவனுகவும் சரீரத்தையே இரதமாகவும் புத்தி தத்துவத்தை ஸாரதியாகவும் உவமித்துச்சொல்லியிருக்கிறவண்ணமே புத்தி தத்துவத்தைக்குறிக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணபகவானை ஸாரதியென்றும் இந்திரியவிசிஷ்டனுன ஜீவாத்மாவை அர்ஜுனன் என்றும் ஸ்தூலதேகத்தை அவன் ஏறிய இரதமென்றும் ஸங்கேதமாக சொல்லப்படுகிறதைக்காண்க.

இம்முறையாக மஹாபாரதத்தின் பிரதான நாயகர்கள் ஒவ்வொருவராலும் இன்ன இன்ன தத்துவமானது குறிக்கப்படுகிறதென்று விவரிக்கப்பட்டது. மஹாபாரதத்தின் பதினெட்டுப்பர்வங்களிலும் அவர்கள் சம்பந்தமாக அமைந்துள்ள கதைகளின் ஸூக்ஷ்மார்த்தத்

தை விவரிக்கும்பொழுது பிரதானமில்லாத மற்றக்கதாநாயகர்களைப் பற்றியும் விவரம் சொல்லப்படும். கர்மத்தை அனுஷ்டிக்கவேண்டிய மனுஷ்யன் பதினெட்டுத் தத்துவங்களின் சேர்க்கையால் அமைந்துள்ளவன். அந்தச்சேர்க்கையில் அபிமானித்து நடிக்கின்ற நடியென்று பொருள்படுகிற ஜீவனே பரதனுவான். அவன் சம்பந்தப்பட்ட பதினெட்டுத் தத்துவங்களின் சேர்க்கை (ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்களின் தொகுதி) பாரதமாகும். அது பதினெட்டுத் தத்துவங்களாலமைந்துள்ளது என்பதை ஸங்கேதமாகக்குறிப்பிட்டுப் பாரதம் பதினெட்டுப்பர்வங்களாகவும் பகவத்கிதை பதினெட்டு அத்தியாயங்களாகவும், பாரதயுத்தம் நடந்தகாலம் பதினெட்டுநாட்களாகவும், அந்த யுத்தத்திற்பிரவர்த்தித்த சைன்னியங்கள் பதினெட்டு அக்ரோணிகளாகவும் கணக்கிட்டு வரைந்துள்ளன.

(தொடரும்.)

P. S. S.
பிரஸிடெண்டு,
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

---

## M. S. பிச்சுவையரவர்களியற்றிய
# "கூடலந்தாதி."

மேற்சொல்லிய அழகிய சிறு பிரபந்தமானது மதுரைமாநகரில் அடியார்களின் துன்பமகற்றவென விளங்கிவரும் கருணைநிதியாகிய "கயற்கண்ணியின்" சேவடியை அலங்கரித்து மதுரையில் வசிக்கும் பிர்ம்மஸ்ரீ M. S. பிச்சுவையரவர்களால் இயற்றப்பட்ட பாமாலையாகும். அது நூற்றொரு கட்டளைக்கலித்துறைகளால் அமைக்கப்பட்டு வடநூல், தென்னூல்களிற் சிறப்புற்றோங்கிய விதியாகிய அந்தாதிமுறைப்படி இயற்றப்பட்டுள்ளது. அக்கலித்துறைகள் சொல்வளம் பொருள்வளம் நிறைந்தனவாய் இந்நாட்டிற் காவியங்களுக்கு ஜீவாதாரங்களெனக் கருதப்படும் ஒன்பது இரசங்களும் நிறைந்து அவற்றுள் மானிடப்பிறவியின் முக்திநிலைக்கு இன்றியமையாத சாதனமாகிய சாந்தி இரசத்தையே பிரதானமாகவுடையனவாய் விளங்குநிற்கின்றன. அவைகளை இயற்றிய ஐயரவர்கள்

தமிழ் இலக்கியப்பயிற்சி மிகவும் உடையவரென்பது இச்சிறு பிரபந்தத்தினுல் நன்கு புலப்படுகின்றது. முறைவழுவாது இக்காலத்தினர் பலரால் ஆங்காங்குச் செய்யுள்களியற்றப்பட்டுவரினும் "சையா" வென்று வடநூலார் மேலாக வியந்துகொண்டாடும் உயர்ந்த பண்பானது அரிதினுமரிதாகவிருப்பது யாம் வியசனிக்கத்தக்க குறையாகும். அக்குறையை முற்றிலும் அகற்றவேண்டுமென்று கருதியோ நம்மையரவர்களுக்கு இயற்கையாயமைந்திருக்கும் வாக்குமாதுரியப்பிரவாகத்தினுலோ அல்லது எல்லாக்கலைகளும் ஒருங்கமைந்த வித்தியாபீடவாசினியாகிய தடாதகைப்பிராட்டியின் அருளினுலோ அவர்கள் இப்பிரபந்தத்தில் அவ்வரிய பண்பை மிகுதியாய்ப்புகட்டிக் கேட்போர்களின் செவிக்கினிதாகவும், சிந்திப்போர் வியந்துகொண்டாடத்தக்க பொருளை நிறைத்தும் துதிக்கப்பட்ட பேரருள் எளிதில் பிரசன்னமாகும்வண்ணம் பக்திரசம் பெருகி வழியும்படி அமைத்துமிருக்கின்றுர்கள். இப்பிரபந்தமானது நம் நாட்டில் முன்னவர் அருளிச்செய்து நமக்கு அளித்திருக்கும் இலக்கிய இரத்தினங்களில் ஒன்ருக இருந்து எந்நாளும் சிறப்புற்றுவிளங்க வேண்டுமென நாம் கருணையங்கடலாகிய மீனலோசனியைப் பிரார்த்திக்கின்றேம்.

தானஞ் சுகம்பெறத் தென்கூடல் மன்முடி தாங்கிவளர்
மீனஞ்சு வாரெழிற் கண்ணுள் மகத்துவம் விண்டுமதுப்
பானஞ் சுதாரச மீதா மெனப்பிச்சு பாரதியார்
கானஞ் சுரர்செயப் பாமாலை பூட்டிய காட்சியென்னே. (க)

தானுருகிக் கேட்பவருஞ் சார்ந்துருகப் பாநெறியைத்
தழுவி முற்றும்
வானுருசொல் வளமிலகப் பொருணிறையும் பொக்கிசமாய்
மகிழ்ந் தருந்தும்
தேனுருகும் பாகமுதம் தெள்ளியபால் மாதுரியம்
தெவிட்டக் கூடல்
மீனுருநேத் திரியடிமேற் சூடினன்பா மாலைபிச்சு
விதிஞர் வேந்தே, (உ)

P. S. S.
பிரஸிடெண்ட்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

உ

# இலக்கண விளக்க மங்கல வாழ்த்து.

இலக்கணவிளக்கம் எனப்பெயரிய நூலும் உரையு மியற்றியவாசிரியர் திருவாரூர் வைத்தியநாத தேசிகர். இவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென்னுமைந்திலக்கணங்களையும் முறையே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரமென்னும் முப்பாற்படவமைத்து இந்நூலிற்றந்தனர். இஃதோர் புதிய நூலாயினும், இதன்கண் தொல்காப்பியம், நன்னூல், தண்டியலங்காரம், யாப்பருங்கலம், பாட்டியல் முதலியவற்றின் சூத்திரங்கள் சிலபல விரவுதனோக்கிப் பழைய விலக்கணநூற்றிரட்டென்றே கோடற்பாலதெனச் சிலர் கூறுப.

சிவஞானயோகிகள் என்பார் இந்நூற்சூத்திரவுரைகளில் இடையிடையே தொல்லாசிரியர் மேற்கோண் மலைவு முதலிய குற்றங்கள் பல செறிந்தனவென்று அவற்றைத்தெரித்துத்திரட்டி "இலக்கண விளக்கச் சூறாவளி" என்னும் பெயர்சூட்டி மறுப்பொன்றெழுதினர். தன்னெதிர்ப்படு தருக்களைத் தாக்கிவீழ்த்து மாற்றலை இயல்பாய்க்கொண்டது சூறாவளியாதலின், இலக்கணவிளக்க நூலின்றிறமைகளை எடுத்துவிரித்துப் பிறநூல்களையடக்குமொருநூலை இலக்கணவிளக்கச் சூறாவளியென்ற லமையுமேயன்றி, இலக்கணவிளக்கத்திலுள்ள வழுக்களைக் கண்டிக்கவெழுந்த நூலுக் கிப்பெயர் பொருந்துமாறில்லையென்று சிலர் கூறுப. அஃதெவ்வாறமையினு மமைகென நிறுத்தி எடுத்தவிடய மேற்செல்வாம்.

இலக்கணவிளக்க நூலாசிரியர் இயற்றுதற்கெடுத்துக்கொண்ட தமதுநூல் இனிதுமுடிதற்பொருட்டு மங்கலஞ் செய்யுமுகத்தான் "மலைமக ளொருபான் மணந்துல களித்த - தலைவனை வணங்கிச் சாற்றுவ னெழுத்தே" என்றனர். வழுவாராயப்புக்க சிவஞானயோகிகள் தமது சூறாவளியுள் இவ்வாழ்த்தை அனுவதித்து "மலைமக" ளென்பது மலையுமகளெனவு மமங்கலப்பொருடந்து தொகையார்பொருள் பலவாய்த் தோன்றலின் வழுவாமென்று மறுத்துரைத்தனர். இம்

மறுப்புப் போதியநியாயத்தைத் தன்பாற்கொண்டுளதோவென்றாலோ சிக்கற்பாலது.

மங்கலவாழ்த்தெனப்படுவது நூலாசிரியராற் சிறந்தபொருளு மினியவோசையுமுடைய மங்கலச்சொற்களிலே, எழுத்துத்தானமாதிய பலபொருத்தங்களானும் இயற்றுதற்கெடுத்துக்கொண்ட நூலுக்கிசைந்து பொருந்தக்கூடிய ஒரு சொல்லை ஆராய்ந்தெடுத்துத் தலைப்பெய்து மற்றுங்குற்றமற்ற சொற்களால் நற்பொருளமைதரத்தொடுத்தியாப்புறுத்தித் தெய்வம்பரவி நூன்முகத்தி லியற்றுஞ் செய்யுளாம். பொருத்தங்களமைந்த மங்கலச்சீர்தெரிந்து தலைப்பெய்தல் இயற்றுநூல் யார்க்குந் தீங்குறுத்தாது நற்பலன் விளைத்து நிலைநின்று நிலவும்பொருட்டும், தெய்வம்பரவுதல் அவ்வாறமைதர விரும்பித் தொடங்கியநூல் இடையூறின்றிச் செவ்விதின் முடிபு போதற் பொருட்டுமாம்.

ஒரு நூலுக்கு மங்கலவாழ்த்து ஒன்றேயன்றிப் பலகூறுங்கால் முதற்செய்யுளின் முற்சீரைமாத்திரம் பொருத்தமுறக்கொண்டு யாப்புறுத்தலன்றி, மற்றைச் செய்யுட்கடோறும் பொருத்தம் பார்ப்பதில்லை. ஆயினும், மலர்தூவித் தெய்வந்தொழப்புக்கானொருவன் குற்றமற்ற நறுமலர்களைத் தெரிந்து கொய்திட் டர்ச்சிக்குமாறுபோலக் குற்றமற்ற சொற்கள்கொண்டே யாப்புறுத்தி வாழ்த்துக்களெல்லாஞ் செய்யப்படல்வேண்டும். குற்றமற்ற சொற்களாவன வழக்கதிகாரத்தோடும் பொருந்தித் தமிழினோடுங்கூடி வடவெழுத்தைத் தவிர்ந்து பெரிதும் இன்பந்தந்து பெரியோராற் செய்யப்பட்ட செய்யுட்களினும்வந்து, திரிதல் பொருட்கோளின்றியே நிரலே பொருள் விளங்கநிற்குஞ் சொற்களாம்.

மங்கலச்செய்யுண்முற்சீர்க் கிசைந்தனவாக ஆன்றோர் கையாண்டு வழங்கிய மங்கலச்சொற்கள் பலவும் பிங்கலந்தை சூடாமணி முதலிய நிகண்டுகளில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிற் சிலவொழிந்த யாவும் பலபொருள் பயக்குங் கிளவிகளாகவே யிருக்கின்றன. "மலை" என்னுஞ் சொல்லும் அம்மங்கலமொழி வரிசையிற் சேர்ந்திருக்குமொன்றாம். "அரி" என்னும் மங்கலமொழி தனித்து நிற்புழி எப்பொருட்குரியதோவென்னுஞ் சங்கையை விளை

விக்கும். அது ஒரு செய்யுளிலமைந்துவரும்பொழுது அயலணைந்துமருவுஞ் சொற்களாற் றனக்குரியபொருளைச்செவ்விதிற்காட்டும். "மலைமகள்" என்பதின் பொருள் கோடற்கு அதனைச் சார்ந்துவருமயற்சொற்களினுதவிதானும் வேண்டுவதில்லை.

"மலைமகள்" என்பது ஒருதொகைச்சொல்லாதலின் அதனைக் கண்ணழித்து இரண்டுசொற்களாய்க்கொண்டு வலிந்து திரித்துப் பொருள்கோடல் வேண்டுவதில்லை. ஒரு பொருளை விளக்கிநிற்கும் பெயர்ச்சொற்கள் இரண்டுசொல்லாயும் பலசொல்லாயும் பொருந்திய பொருளால் (பொருள் விளக்குதற்பொருட்டு வேற்றுமையழிந்தும் ஒரோவிடத்து வேற்றுமையும் வேற்றுமையைச்சார்வாகிவருஞ்சொற்களுமழிந்தும்) ஒரு சொல்லாய்த்தொகும். (தொகையெனினும் சமாசமெனினு மொக்கும்.) "கொற்றன் உடைய மகள்" (ஆறும்வேற்றுமைகெட்டுக்) "கொற்றன்மகள்" எனவும் "மலையின்கண்வேடன்" (ஏழாம் வேற்றுமையழிந்து) "மலைவேடன்" எனவும் இன்னவாறே வரும் பிறவெல்லாந் தொகைச்சொற்களேயாம். (வீரசோழியம், தொகைப்படலம் முதற்செய்யுளும் பிறவிலக்கண விதிகளுங்காண்க.) இம்முறையானே, நாமகள், திருமகள், பூமகள், கலைமகள் என்பன போலும் ஒரு தொகைச்சொல்லாகிய "மலைமகள்" மலையரசன் புதல்வியாகத் தோற்றியநிமித்தம்பற்றி உமாதேவியார்க்கமைந்த பெயரென்பது சிறுவருமறிந்தவுண்மையாதலின் மலைவுண்டாதற் கிடனேயில்லை. ஆகவே அதனை அமங்கலமொழியாய்க் கோடல் அமையாதாம்.

"மலைமக" ளென்னுஞ்சீருடன் "ஒருபான்மணந்துலகளித்த தலைவன்" என்னுஞ்சொற்களும் வரிசைகொண்டயலி னிசைந்துநிற்ப "மலையுமக"ளென வலிந்து தகாப்பொருள்கோடற்கிருந்த தொல்லைதானென்னை? குருவளியுடையார் "மலையுமகள் எனவும்" என்றமையால் அச்சொல் தனக்குரியதாய் முன்னர்ப்பயக்கும் பொருள் ஒன்றுளதென்றும் அப்பொருளுடன் "மலையு" மென மற்றோர் பொருளையுமது தருமென்பதூஉம் பெற்றாம். அஃதங்ஙனம் பெறலின், முன்கொடுக்கும்பொருளை ஏற்றுத் திருப்திகாணுவழியன்றி மற்றோர் மறுப்பொருளைத்தேடற் காவசியக முண்டாவதில்லை.

இலக்கியவிலக்கணத் துறைகளி னெடிதுசென்று பயின்று தேர்ந்து நாவலர்ப்பட்டமுஞ்சுமந்து யாப்புடன் அணிவிரிக்கப்புக்க வைத்தியநாத தேசிகர் நூன்முகத்து மங்கலங்கூறு மரபறியாது பிழைத் திடர்ப்பட்டனரென்றால் நம்புதற்கெளிதோ ? வடமொழி தென்மொழியென்னு மிருபெருங்கடலையும் வாரியுண் டேப்பமிட்ட சிவஞானயோகிகள்தாமும் அறியாது கூறினரென்பது மசாத்திய மே! ஆயினும் பொறாமை செருக்காதிய குறும்புகள் விளைக் குங் கருவிடமொத்து முக்குணக்கடைநிற்குந் தாமதகுணச்சேட்டை யாலோ, அன்றிப் பிறிதென்கொண்டோ, மற்றாசிரியர் மதங்களை ஆங்காங்குக் கண்டபடி மறுத்துத் தமது நூதனமதங்களைத் தாபிக் குங்கொள்கைகொண்டொழுகி அதனானே அறுகம்புல்லிற் றடக்கிய யானைபோற் பலவிடத் திடர்ப்பட்டனராகவுந் தெரியவருகின்றது.

காஞ்சிபுரத்து வைணவர்கள் கம்பராமாயணமொன்றே தமிழிற் சிறந்தகாவியமென்று கொண்ட செருக்கை அழிக்கும்பொருட்டு அந்நூலின் முதற்செய்யுளாகிய "நாடியபொருள் கைகூடும்" என் னும் பாட்டை முற்றுங் குற்றமே எனச் சங்கித்துப் பின்னர் அவ் வைணவர்கள் உத்தரங்கூற வியலாராய் வணங்கித் துதித்தவழி அவர்களை உவப்பித்தற்பொருட்டுத் தாம் நிறுத்திய சங்கையைத் தாமாகவே அறுத்து விடையிறுத்தனர். (கம்பராமாயண முதற் செய்யுட்சங்கோத்தரவிருத்தி என்னும் நூலைக் காண்க.) இவ்வண் ணம் ஒன்றை ஒருகாற் பிழையென்றும்-மறுகாற் சரியென்றுஞ் சாதிக்குமியல்புடையார் கல்விச்செருக்குடையரென்று சொல்லிக்காட் டவும் வேண்டுமோ ?

அன்னம்பட்டர் என்பார் வடமொழியில் இயற்றிய தருக்க சங்கிரகநூலுரைகளைச் சிவஞானயோகிகள் தென்மொழியிற் பெயர்த் துச்செய்யத்தொடங்கி நூன்முகத்திலே "மன்ற வாணனை மனத் திடை நிறுவிவண்டுறைசை-வென்ற சீர்நமச் சிவாயமெய்க் குரவனை வணங்கி-என்றனைப்பொருஉ மிளையவர்க் கினிதுணர் வுதிப்பத்-தென் றமிழ்ச் சொலாற் செயப்படுந் தருக்கசங்கிரகம்"என்று மங்கலவாழ்த் துக்கூறினர். இவ்வாழ்த்தில் (சிவஞானயோகிகள் பிறர் செய்யு ளிற் குற்றம்பிடிப்பதுபோலக் குற்றங்கூறவேண்டுமாயின்) "மன்ற

வாணன்” என்பது தொகையார்பொருள்பலவாய்த்தோன்றி மலைவு செய்தலோடு ஓசையானும் “கொன்றகொலைஞன்” என்றாலொத் தினிமையுமிழந்துநிற்றலான் மிகப்பெரு மமங்கலமாமென்று சொல்லற் கிடமுண்டு. “என்றனைப்பொரூஉமிளையவர்க்கினிதுணர்வுதிப்ப” எனச்சொற்றதும் இயைபற்றதேயாம். எங்ஙனமெனில், தம்மைப் பொருவுமிளைஞர் அறிவாற்றலானும் நூலியற்றுதிறனானும் தமக் கொத்த சமத்துவமுடையராதலின், தமது நூலால் அறிவு வளர்ச்சி முதலிய பலன்கள் அவர்க்கேய்துமாறில்லை. ஆகவே தமது நூல் ஒரு பயனில்செய்கையாவதுங்காண்க. கண்ணுளான் அஃதில்லார்க்கு வழிகாட்ட லமையுமேயன்றி உள்ளார்க்குக் காட்டவேண்டுவதில்லை. கண்ணிலி கண்ணிலிக்கு நெறிகாட்டலுஞ்சாலாது.

இத்தகைய விநோத கவியை நான்முகமங்கலவாழ்த்தாகவமைத்துச்சென்று அப்பால் உரைமுகத்தில் “மலைமகண் மணந்த வுலகினுக்கிறைவன்” என்று இலக்கணவிளக்க நூலாசிரியர் பாவித்த சொல்லையே தாமுங்கொண்டு (மலைமகண்மணந்த உலகம் யாதோ? அவ்வுலகுக்கிறைவன் யாவனோ? என்று கேட்பவர் மயங்க) மங்கலஞ்செய்தனர். இச்செயல் அவர்க்குப் பெரியதோ ரிழுக்காமெனச் சிலர் கூறுவரென்றும் அவர் கூற்று நுணுகியாராயாமையாற்கூறுங் கையறியாவுரையென்றுந் திராவிடப்பிரகாசிகைநூலுடையார் மிகவும் முழங்குகின்றனர். “முன்னறிந்ததற்குப் பின்னறிவது மாறாயின் அவ்வளவில் முன்னதேவிதி பின்னது வழூவென்றானும், பின்னதே விதி முன்னது வழூவென்றானுங் கதுமெனக்கொண்டு நூலுரைப் பொருள் சிதைவு செய்யாது இஃதென்னூல் விதியோ மற்றெவ்வுரைவிதியோ என்றெண்ணி நூலுரை கற்க” வென்றோரிடத்தும், “குதர்க்கத்தாற் றஞ்சமயநாட்டிப் பரசமய நிந்தித்தல் குற்றமா” மென்று மற்றோரிடத்துந் தமது நூலிலே மாணாக்கர்களுக்கு மதியூட்டித்தெருட்டுந் திராவிடப்பிரகாசிகைநூலார் அப்பெருமதியிற் சிறியதோர்கூற்றைத் தாமுங் கொண் டனுசரிக்காது வன்மொழி கலந்து பதறிப் பகர்ந்த பன்மொழிகளையும் இங்ஙனம் விரிக்கிற்பெருகுமாதலின், சுருங்கத்தொகுத்துத் தருகின்றாம்.

நூலாசிரியர் தாமே தமது நூலுக் குரையியற்றுவாராயின் நூலினிதுமுடிதற்பொருட்டுக்கூறும் மங்கலவாழ்த்தே உரை யினிது

முடிதற்பொருட்டு மமையுமாதலின் உரைக்கு வேறு மங்கலவாழ்த்துக் கூறல்வேண்டாவென்பது பிரயோகவிவேகநூலுடையார்போலும் ஒருசா ராசிரியர் கோட்பாடென்றும், நூன்முக மங்கலவாழ்த்து அஃது இனிதுமுடிதற்பொருட்டாயேயமைக; உரைக்கு வேறாக மங்கலவாழ்த்துக் கூறற்பாற்றென்பது அன்னம்பட்டர் முதலானோர் போலும் மற்றொருசா ராசிரியர் கோட்பாடென்றும் நூலுரைகளை ஒற்றுமைநயத்தா னொன்றெனவும் வேற்றுமைநயத்தான் வேறெனவுங்கொண் டவ்வாறு செய்தலின் அவ்விருகொள்கைகளும் வழக்கென ஆன்றோர் போற்றிக் கோடற் கேற்பனவாமென்றும், தருக்க சங்கிரகமும் அதனுரையுந் தென்மொழியாற்கூறப்புகுந்த சிவஞான யோகிகள் இங்ஙன மாசிரியன்மார் ஒன்றற்கொன்று மாறுபாடாகக் கொண்ட இரண்டுகொள்கைகளுள், ஒருதலைதுணிதலானே, முன்னையதனையே தம்மதமாகத்தழீஇ "மன்றவாணனை" என்னுஞ்செய்யுளான் மங்கலவாழ்த்துச் செய்தருளினரென்றும், அக்கொள்கை தழீஇ அங்ஙனஞ்செய்வாராயினர்க்கு "மலைமகண்மணந்த" என்னும் பிற்செய்யுள் ஆண்டுச் செய்யாதொழிதல் வேண்டுமாலெனின், வடநூலாசிரியர்கொள்கை அதுவெனக்காட்டுமாறு செய்தனரென்றும், அங்ஙனஞ்செய்தார் அப்பிற்செய்யுளையும் மங்கலமுறச்செய்யாது அமங்கலமாய்த் தந்ததென்னையெனில், மங்கலமாகச்செய்யின், தாந்தழீஇய கொள்கைக்கு மாறாகுமெனக்கண்டு அங்ஙனஞ் செய்யாது அமங்கலமாய்ச் செய்தனரென்றும், அவ்வாசிரியர்க் கதுவே கருத்தாமாறு எற்றாற்பெற்றதெனின், நூன்முகவாழ்த்து மங்கலமாகவும் உரைமுக வாழ்த்து அமங்கலமாகவுஞ் செய்தமையானும், "மன்றவாணன்" என்றும் "நமச்சிவாயகுரவனை" என்றும் முறையானே தமது சந்தானகுரவர் பரமெனக்கண் டுபாசிக்கு நடராச மூர்த்தியையும் தமது குருமுதல்வரையும் மொழிபெயர்ப்பினுட்டலைப்பெய்து கிளந்தினிதோதிப் பிற்செய்யுள் வடமொழியிற்கிடந்தவாறே மொழிபெயர்த்துக் கூறுமதனானு மென்றும், மங்கலவாழ்த்தொன்றேயன்றிப் பலகூறினரு மங்கலமுதற்சீர் முதற்செய்யுளின் கணன்றி மற்றைச்செய்யுட்கடோறும் யாப்புறுத்துரையாமை வழக்கின்கட்காண்டலின், வடமொழித் தருக்கசங்கிரக நூலு முரையுந் தென்மொழியா னொருங்குபெயர்த்துச் செய்யலுற்ற வாசிரியர்க்கு

முன்னைச்செய்யுளிற்போலப் பின்னைச் செய்யுளினுமங்கலமெய்த முதற்சீர் தலைப்பெய்துரைத்தல் வேண்டற்பாற்றன்றென்றும், மொழிபெயர்த்தல்யாப்புள், ஆண்டில்லாத பொருள்கள் தலைப்பெய்து அங்ஙனங் கூறுதலமையுமோவெனின், ஆண்டைக்கு மாறுபடுவன தலைப்பெய்து கூறுதலமையாது வேண்டப்படும் பொருள்கள் தலைப்பெய்து கூறல் அந்நூற்குச் சிறப்பேயாகலின் அமையுமென்றும், அன்ன பலவமையுமென் றறிவுறுத்தற்கென்றே ஆசிரியர் தொல்காப்பியனார் மொழிபெயர்ப்பியாப்பிலக்கணங்கூறியவிடத்து "தொகுத்தல் வகுத்த றுகைவிரி மொழிபெயர்ப்-பெனத்தகு நூல்யாப் பீரிரண்டென்" வென்று சூத்திரஞ் சிதைத்து வேறுபடுத்திக் குன்றக்கூறிப் புரைபோய நன்னூலார் போலத் "தொகுத்தல் வகுத்த றுகைவிரி மொழிபெயர்த்" தென்றொழியாது "மொழிபெயர்த்,ததர்ப்படயாத்தலொடனைமரபினவே" என்றங்ஙனஞ்செய்வாராயினதூஉமென்றும், இம்முறையெல்லாம் நுணிகிநோக்காது இலக்கணவிளக்கநூலார் "மலைமக" ளென்றெடுத்தது குற்றமாமெனச் சொற்றவாசிரியர் தாமே "மலைமகண்மணங்" தென்றவ்வாறு தாமுமெடுத் திழுக்குற்றாரென்று தூற்றுதல் கையறியாமையென்றுங் கூறிமுடிக்கின்றனர்.

ஒருமங்கலஞ் செய்தலும் பலமங்கலஞ் செய்தலுமாகிய இருவகைக் கொள்கைகளும் வழக்கெனெ ஆன்றோர் போற்றிக்கோடற்கேற்பனவாமென்பது (திராவிடப்பிரகாசிகையார் சொற்படி) யாவரும் ஒப்புக்கொள்ளு மோருண்மையாகலின், அதுபற்றியே, ஒருகொள்கையைத் தம்மதமாகத் தழீஇய சிவஞானயோகிகள் அவ்வளவில் நின்றொழியாமல்(ஆன்றோர் போற்றிக்கோடும்) மற்றக்கொள்கையினுந்தாவிக் கண்டிக்கப்புக்கது பெருந்தவறும். ஒருமங்கலங் கூறுங் கொள்கையைத் தழீஇய வாசிரியன்மார் பலமங்கலஞ்செய்தல் அனாவசியகமெனக் கருதிவிட்டாரேயன்றிக் குற்றமெனக்குறித்து விலக்கினாரல்லர்.

உரைமங்கலங் கூறியது வடநூலாசிரியர் கொள்கையைக் காட்டுதற்கென்றால் அச்செய்யுளை வடநூலிற் கிடந்தபடியே மங்கலமாகச் செய்யவேண்டியதன்றி அமங்கலமாகச் செய்தது தவறும். அமங்கலமாக்கியது, தங்கொள்கையைக் காட்டும்பொருட்டெனில், அஃதென்

ளெக்குமென்றால், சோறுகறி அடுவான் அத்தொழில் புனிதமுறும் பொருட்டுப்புனல்படியுமிடத்து ஒருமுறை முழுக்கு அமையுமென்று ஒருசாராரும், அதான்று முதன்முழுக்குச் சோறடற்கு மாத்திரமே அமையும் கறிசமைத்தற்குப் பின்னொருமுழுக்கு வேண்டுமென்று மற்றொரு சாராருங் கையாடிவரு மிருவழக்கையுங் கண்ணுற்றவனாகிய ஒருவன் இவற்றுள் ஒருதலை துணிந்து முன்னவர் மதமே தன் மதமெனக்கொண்டு தழீஇ அதனைப் பின்னவர்க்கு மறிவுறுத்தற் பொருட்டுப் பிரதமத்திற் றுய்யநீராடிச் சோறட்டுப் பின்னர்க் கருங் கறைச் சேற்றின்மூழ்கிக் கறிசமைத்தாற்போலுமென்க.

உரைமங்கலத்தை முற்றாய் ஒழித்து அவ்வொரு செயலினாலே தங்கொள்கையை இனிது தோன்றக் காட்டலாமாதலின் அம்முறை செய்யாது மங்கலமாயுள்ளதொன்றைப் பிறழ்த்தி அமங்கலமாய்த் தந்தமை பெருந்தவறாம். மொழிபெயர்ப்பும் பிழை பட்டதேயாம்.

வடநூலிலே இச்செய்யுள் அமங்கலமாய்க் கிடந்ததெனினும் மொழிபெயர்ப்பியாப்புத் தொன்மை விதிநோக்கி நூலைச்சிறப்பிக்குமுபகாரமாய் அதனை மங்கலப்படுத்தி மொழிபெயர்க்க வேண்டியது ஆன்றோர்கடனேயாம்.

நான்முக வாழ்த்துப்போல மற்றைய வாழ்த்துக்களினும் மங் கலச்சீர் தலைப்பெய்துரைத்தல் வேண்டற்பால தன்றெனல் முற்றும் அமையாது. மேற்காட்டியபடி மங்கலப்பொருத்தச்சீர் தலைப்பெய்தல் வேண்டுவதில்லையாயின் வாழ்த்துகளிலாயினும் மற்றைச்செய்யுட் களிலாயினும் அமங்கலச் சொற்கள் வரல் எஞ்ஞான்றும் இழுக்கே யாம். அரன்பூசை அறுபொழுதாற்றப் புக்கான் முற்பொழுது மாத் திரம் மங்கலத்திரவியங்கள் கொண்டும் அப்பால் யாதுகொண்டுமாற் றலாமென்றவிதி யாண்டுமில்லை.

இவ்வாறே திராவிடப்பிரகாசிகைநூலார் யோகிகட்குச் சான்று போய்க் காட்டு நியாயங்கள் பலவும் தம்முண் முரணிமயங்கி விரோ தித்து மாறுகொண்டும் பிறழ்ந்தும் வலியிழந்துஞ் சபலமிலவாதல் காண்க.

சிவஞானயோகிகள், அன்னம்பட்டரையொப்பத் தருக்கசங்கிர கத்துக்குத் தாமும் இரண்டுமங்கலமே செய்தனரென்றும் உரைமங் கலத்தை அமங்கலமாகச் செய்யவேண்டுமென்ற கருத்தொடு எண் ணிச் செய்தனரல்லவென்றும், இலக்கணவிளக்க நூலாசிரியர் "மலை மகள்" என்னும் மொழியை மங்கலமொழியெனக்கொண்டு வாழ்த் துச் செய்தபடியே தாமும் அச்சொல்லை மங்கலமெனக்கொண்டு செய் தனரென்றும், வழுவாராயப்புக்கஞான் றெழுந்த அவசரத்தான், கம்பராமாயணக்கவியிற் றுக்கியவாறு கல்வித்திறமைகாட்டத் தாக்கி ஞரென்றுந் துணிதலே முறைமைபோலும். இத்துணிவு மாறுயின் தெளிவுறுத்துங்கடன் ஆன்றோர் பாலதேயாம்.

ச. பூபால பிள்ளை.

---

உ

சிவமயம்.

# சைவாகமமிருபத்தெட்டு.

(௩௦௩-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

ஆகமம் என்பது பரமாப்தரினின்றும் வந்தது எனப்பொருள் படும். இன்னும் ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசு என வும், ம என்பது பதி எனவும் பொருள்படுமாதலால், ஆகமம் என் பதற்குத் திரிபதார்த்த லக்ஷணத்தை உணர்த்தும் நூலென்பதே சிறந்த பொருள். பின்னுென்று:— ஆ என்பது சிவஞானமும், க என்பது மோக்ஷமும், ம என்பது மலநாசமும் ஆதலால், ஆன்மாக்க ளுக்கு மலத்தை நாசம்பண்ணிச் சிவஞானத்தை உதிப்பித்து மோக்ஷ த்தைக்கொடுத்தல்பற்றி ஆகமமெனப்பெயராயிற்று. ஆகமமென்பது ஆப்தவாக்கியம். ஆகமங்கள் லௌகிகம், வைதிகம், அத்தியான்மகம், அதிமார்க்கம், மாந்திரம் என ஐவகைப்படும். தற்காலத்திற் பயன் றருவது வைதிகம். ஆத்தும விசார வியற்கையது அத்தியான்மகம்.

யோகவியற்கையது அதிமார்க்கம். சிவஞானவியற்கையது மாந்திரம். எனப்படும். அவற்றில் மாந்திரம் பிறநூல்களைப் பூருவபக்ஷமாகக் கீழ்ப்படுத்தி மேற்பட்டுவிளங்கும். காமிகமுதலிய சைவாகமங்கள் ஆகமாந்தமென்னும் ஞானப்பகுதி யோக டி நாமமாகிய சித்தாந்தமென்னும் பெயருடையது. அஃது இரத்தினத்திரயத்திலே சித்தாந்தமே சித்தாந்தம். அவைக்கு வேறானவை பூர்வபக்ஷங்கள் என்றும், காந்தத்திலே எல்லையில்லாத சிவபிரான் வெள்ளிமலையாகிய கைலாசத்திலே சநகர் முதலிய முனிவர்களுக்குத் திரிபதார்த்தார்த்தங்களினாலே சம்மிதமாகியும் இரகசியமாகியும் ஆகமாந்தம் என்னும் பெயருள்ள சித்தாந்தத்தைச்சொல்லிக்கொண்டிருந்தார் என்றும் சொல்லப்பட்டது.

சிவப்பிரகாசமாகிய சிவஞானம் பரஞானமாம். பசுபாசபதார்த்தபோதகமாகிய வேதமுதலியன அபரஞானமாம். லௌகிகம் முதலிய ஐந்து சாத்திரங்களும் முறையே ஒன்றற்கொன்று ஏற்றமுடையன. காமிகத்திலே சித்தாந்தம் மந்திர தந்திரமாகும். அதிமார்க்கம் அதனிற்றாழ்ந்தது. அத்தியான்மகம் அதிலுந்தாழ்ந்தது. வைதிகம் அதிலுந்தாழ்ந்தது. லௌகிகம் அதிலுந்தாழ்ந்தது என்று சொல்லப்பட்டது.

சைவாகமங்களவைதிகவாக்கியமாதலின் அப்பிரமாணங்களென்று சிலர் கூறுவர் வேதாந்த நிஷ்டைபெற்றுக் களங்கமற்ற ஞானிகளும் சிவாகமத்திலே தற்பரர்களாகி ஞானபாதத்திலே நிலைநின்றோருமாகிய இருவகையோரும் பெறற்கரிய சாயுச்சியம் பெறுவர்கள். கருமத்தையும் பிரமத்தையும் உணர்ந்தும் ஆகமங்களின்படி ஒழுகாதவர்கள் நால்வகைத்தண்டனைகளினாலுந் தண்டிக்கப்பட்டு அளவில்லாத காலம் நரகத்திற் கிடந்தழுந்துவார்கள். என்று காந்த சம்பவங்கூறியது.

வேதநெறிவழுவிய மாந்தர்க்கே தந்திரங்கள் கூறப்பட்டன என்று சில நூல்களிற் கூறியதென்னையெனில், ஆண்டுக்கூறியது வாமசோம லாகுள பைரவ முதலிய தந்திரங்களையன்றிச் சிவசித்தாந்தத்தை அன்றென்க. அவைகளை அப்பயதீக்ஷிதர் இயற்றிய சிவதத்துவவிவேகவிருத்தியிலே பலபிரமாணங்கொண்டு கூறியவாற்றானுணர்க.

இனிப்பிரம மீமாஞ்சைக்கு நீலகண்ட சிவாசாரியர் இயற்றிய பாஷியத்திலே வேதசிவாகமங்களுக்குப் பேதங் காண்கிலம்; வேதமே சிவாகமம் என்று கூறியுள்ளார். சிவாகமங்கள் தனது பொருட்டன்மையால் மகாமாயையும், அதனிற்றோன்றிய சிவமுதற் சுத்த வித்தை யீறாகிய காரியங்களும், மல மாயா கர்மங்களும் கலைமுதற் பிருதிவி யீறாயுள்ள காரியங்களுமாகிய அமிதார்த்தங்களை விளக்கலால் வியாபகமாம். வேதமுதலியன தம்பொருட்டன்மையால் பிரகிருதிமுதல் பிருதிவியீறாயுள்ள காரியங்கள் மாத்திரமாகிய மிதார்த்தங்களை விளக்கலால் வியாப்பியங்களாம் என்பதை, மிருகேந்திராகமத்திலே மிதார்த்தத்திலும் அமிதார்த்தத்துக்கு மேன்மையுண்டென்று கூறியவாற்றாலுணர்க.

சிவதீக்ஷைபெற்ற பிராமணர்முதலிய நான்கு வருணத்தாருமே சைவாகமங்களுக்கு அதிகாரிகளென்று சிவாகமங்கள் செப்புகின்றன. சைவபுராணத்திலே பசுசாத்திரங்களைப்பற்றுதுவிட்டுச் சிவசாத்திரத்தைப் பற்றிப்பயிலும் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருமே ஆசாரியராவரென்று புகழப்படுவர். சிவாகமத்திற் கூறப்பட்ட ஞானமே ஞானமென்று சொல்லப்படும். அதுவே சிவபிரானைப்பற்றின பெரியோருக்கு முத்திசாதனம் என்று கூறுதலாலும், சுவேதர் உபமன்னியர் கிருஷ்ணர் அருச்சுனர் முதலியோர் சிவசித்தாந்தமார்க்க சிரவணாசரணஞ்செய்தமையாலும் தில்லைவாழந்தணர்களாகிய வைதிகப்பிராமணர்கள் சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்ற நான்கும் பெற்றோர்கள் எனவும் மூலாகமங்களையும் உபாகமங்களையும் ஓதி உணர்ந்தோர்கள் எனவும் சிவரகசியத்து நவமாம்சத்தில் இருபத்தைந்தாம் அத்தியாயத்திலும் சிதம்பரமான்மியத்திலும் கூறப்படுதல் காண்க. சிவாகமத்திற்கூறிய தீக்ஷையின் உயர்ச்சி வாயவ்விய சங்கிதையிலே சைவநூலிற் கூறப்பட்டது.

பாசம்மூன்றையுந் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத் தவிர வேறு யாதொரு ஆச்சிரமமும் இவ் வுலகத்தில் மாந்தருக்கு மேன்மையன்று.

ஆதலால் தீக்ஷையினாற்றான் மோக்ஷம். ஆச்சிரமங்களினாலும் மற்றைய கருமங்களினாலும் மோக்ஷமில்லை. சங்கராசாரியர் இயற்றிய

பிரபஞ்சசாரத்தில் பஞ்சாக்ஷரஜப விதானப்பிரகரணத்தில் - சிவாக மோக்ஷசிவசம்ஸ்காரரூப சடத்துவசோதனமென்னும் நிருவாண தீக்ஷையைச் செய்துகொண்டவர்களே, பஞ்சாக்ஷர ஜபத்துக்கும் சிவ பூஜைக்கும் அதிகாரிகள் என்றும், இந்தத்தீக்ஷை ஞானவதி, கிரியாவதி என இரண்டு பேதம் என்றும், தேசகாலாதிகாரசம்பத்துகளுக்கு ஏற்ப இந்த அநுட்டானஞ் செய்துகொள்ளல்வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சூதசங்கிதையில் யஞ்ஞவைபகாண்டத்தில் முப்பத்தைந்தாவது அத்தியாயத்தில் "பின்பு ஆகையால் சம்பிரதாய சமந்வயஞ் சொல் லப்போகிறோம்" என்று தொடங்கிக்கொண்டு சடத்துவசோதநா ரூப மான கிரியாவதிதீக்ஷை சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலினால் தீக்ஷைகளைப்பெற்றுச் சிவபிரானினாலே அருளிச்செய் யப்பட்ட சிவாகமங்களை ஓதியுணர்ந்து அதன் நெறியொழுகி மோக்ஷ சாதனத்தை அடைதலே பெறுதற்கரிய மேலான பெறுபேறாகும். விரிக்கிற் பெருகுமென்றஞ்சி இத்துடன் முடிக்கின்றோம்.

காரை. மு. சபாரத்தின ஐயர்,
தமிழ்ப்பண்டிதர்.

---

ஸ்ரீ

# நுண்பொருண்மாலை.

(௫௬அ ஆம் பக்கத்தொடர்ச்சி.)

௧௩௧௪. "யாரினுங்காதல............மென்று."

நு - லை:—என்றேனா — என்றேனாக.

௧௩௧௫. "உள்ளினே............புலத்தக்கனள்."

நு - லை:—மறந்தென்று அருத்தாபத்தி காட்டியது காண்க.

௧௩௧௬. "வழித்தினா............ரென்று."

நு - லை:—அன்புடையார் நினைத்தவழி நினைத்தவர்க்குத் தும்மல் தோன்றுமென்பது மகளிர்வழக்கு.

௧௩௧அ. " தும்முச்செறுப்ப..........வென்று."

நு - லை:—தும்மு—முதனிலைத் தொழிற்பெயர். உருமு, தெவ்வு, உரிஞு வென்பனபோலும். எம்மையென்பது நும்மோடியாது மியைபில்லாத எம்மையென்பது படநின்ற விசையெச்சம். இதனை வடநூலார் காகு வென்பர். தொனியுமென்பர்.

௧௩௨௩. " புலத்தலிற்.........ரகத்து."

நு - லை:—பயனுவமைகாண்க.

௧௩௨௪. " புல்லிவிடாஅப்..........படை."

நு - லை:—புலவியுட் படைக்கலந் தோன்றுமென்பது வினை நிகழ்ச்சிக்கண்வந்தது.

௧௩௨௬. " உணவினு.........வினிது."

நு - லை:—காமத்திற்கென்பது காமமெனச் சாரியையு நான்கனுருபும் விகாரத்தாற் றொக்கது.

௧௩௨௮. " ஊடிப்பெறுகுவங்........வுப்பு."

நு - லை:—உப்பு—இனிமை.

௧௩௨௯. " ஊடுக..........விரா."

நு - லை:—ஊடுக, நீடுகவென்பன வேண்டிக் கோடற் பொருள. மன்னிரண்டும் ஆக்கத்தின்கண் வந்தன. ஓகாரங்களசைநிலை.

(தொடரும்.)

பத்திராதிபர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதினொன்றாவது வருடோற்சவக்
கொண்டாட்டத்தன்று வித்துவான் சோதுகுடி
**எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் கூறிய**

# வாழ்த்துக் கவிகள்.

தண்டமிழின் சாறுநிறைத் தாறுமுக மன்மேவுந்
    தானங் கூடற்
பண்டைநக ரெனற்கேற்பத் தமிழ்ச்சங்கச் சாறுநிறை
    பான்மை காட்டி
மண்டுபுக ழாறுமுக மன்மேவுந் தலைமைதமிழ்
    மக்கள் யாருங்
கொண்டதொரு பெருநாளின் கோலமா மிங்ஙனமே
    கூடல் வாழி. (க)

குமரவே டமிழ்வளர்த்த கூடலிது வெனப்புகல்வார்
    கொள்கைக் கேற்ப
அமரனு முக்கிரபாண் டியவள்ளல் தமிழ்ச்சங்க
    மமைத்துக் காத்தா
னமையெவரே புரப்பரெனத் தமிழ்கலங்கா தெங்நாளு
    நானே காக்குஞ்
சுமையுடைய தலைவனெனச் சுப்ரமண்ய வேளமைந்த
    தோற்றம் வாழி. (உ)

பன்னுதமிழ்ப் பின்சென்ற பைம்புயல்போற் படியாரும்
    பரிந்து சீர்த்தி
முன்னுரைக்கத் தமிழ்வளர்க்கு முயற்சியெலா மூக்கமுடன்
    முறையே யாற்ற
மன்னுகா ரியதரிசி மாண்பமையு முயர்சீனி
    வாச மாலும்
அன்னவனேர் சுந்தரரா சனுமணிமே வுதல்சங்கத்
    தறமே வாழி. (ந)

(முற்றும்.)

உ

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பதினொன்றுமாண்டு
நிறைவுக் கொண்டாட்டத் தினத்துச் சங்கத்து நிரந்தர
அக்கிராசனாதிபதியாயிருக்கும்
பிர்ம்மஸ்ரீ-

## P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள்மீது சொல்லிய

## வாழ்த்து.

---

கட்டளைக் கலித்துறை.

---

தறைமன்னு கூடற் றமிழ்ச்சங்கந் தாங்குந் தலைமைபுனை
யிறைமன்னு பாண்டித் துரைமன் பிரிய வெளியமுறுங்
குறைமன்னு றுவகை நீக்கின னிக் குவலயத்தின்
மறைமன்னு சுப்பிர மண்ணிய நாவலன் வாழியவே.

**வி. சாமிநாதன்,**
காரியதரிசி,
தஞ்சை ஸ்ரீ வித்தியாநிகேதந சபை,
கருந்தட்டாங்குடி, தஞ்சாவூர்.

---

## புத்தக வரவு.

---

பெண்மதிமாலை:—இப்புத்தகம் மாயூரம் மாஜிமுன்சிபு வேத நாயகம்பிள்ளையவர்களாற் பெண்பாலார்களுக்கு நல்லறிவையூட்டத் தக்க பல கற்பனைகளமைந்த எளியநடையிலெழுதப்பட்டுப் பிரஸித்தி பெற்றதென்பது யாவர்க்கும் தெரிந்ததே. அதனை அவர்கள் புத்திரர் ஸ்ரீமத் - ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள் மூன்றாவது பதிப் பாகப் பிழையறப் பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். ஷை புத்தகம் வேண்டுவோர் விலைவிவரமுதலியன அவர்களுக் கெழுதிக்கேட்டுக்கொள்க.

---

ஜார்ஜ் சக்கரவர்த்தியின் டெல்லிதர்பார்:—இப்புத்தகத்தில் டெல்லியின் சிறப்பும் சக்கரவர்த்தி தம்பதிகளின் இந்திய யாத்திரைதொடங்கி அவர்கள் ஜன்மதேசம் சென்றவளவுமுள்ள விருத்தாந்தங்களும், டெல்லிதர்பார் வைபவங்களும், சக்கரவர்த்தியின் பேச்சுக்களும், ராஜீய நன்மைகளும், முதலிய பலவிஷயங்கள் எழுதப்பட்டு அதற்கு வேண்டிய சில படங்களுடன் சென்னைச் சுதேசமித்திரன் ஆபீஸிற் பதிக்கப்பெற்றிருக்கிறது. இதன் விலை அணு 12. வேண்டுவோர் ஷை ஆபீசுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

---

ஞானகாந்தி:—இது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவராகிய செங்கை ஸ்ரீமான். இராஜு செட்டியார் எம். பி. பி. ஐ. அவர்களால் இயற்றப்பெற்றதொரு தமிழ்நாவல். பெண்மக்களை நல்வழிப்படுத்தாது கல்வி கற்பிப்பது முதலிய செயல்கள் தீங்கு விளைக்குமென்பதைக்காட்டி யாவரும் படிக்கும்படி எளியநடையிலெழுதி முடிக்கப்பெற்றிருக்கிறது. வேண்டியவிடங்களில் இடையிடையே பழஞ்செய்யுட்கள் மேற்கோளாகக்காட்டப்பட்டிருக்கின்றன. இதற்குப் பல பண்டிதர்களும் கொடுத்த சாத்துக்கவிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன்விலை அணு 12. வேண்டுவோர் ஷை செட்டியாரவர்களுக் கெழுதிப்பெறலாம்.

---

தனிப்பா நாற்பது:—இது வேலூர் காலேஜ் உதவியாசிரியரான ஸ்ரீமத். வே. முத்துசாமி ஐயர் பீ. ஏ. அவர்களாற் பல சந்தர்ப்பம் பற்றிப் பாடப்பட்ட நாற்பது செய்யுளடங்கியது. ஐயரவர்கள் ஆங்கிலக் கல்வி கற்குமிடையே தமிழையும் நன்குகற்றுச் சங்கப்பரீக்ஷையிலும் தேறிப் பரிசுபெற்றிருப்பதுடன் செய்யுளியற்றுந் திறமை பெற்றிருத்தல் மிகவும் அருமைவாய்ந்ததே.

---

☞ மேற்கண்ட புத்தகங்கள் "பாண்டியன்புத்தகசாலை"யில் வழக்கம்போற் சேர்க்கப்பட்டன.

பத்திராதிபர்.

---

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

## 1912-ஆம் மேமீ 1உ முதல் 31உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை ரூபா. | அ. | ப. | செலவு. | தொகை. ரூபா. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| விரோதிகிருது பைங்குனி, பரீதாபி-ஆம் சித்திரை இந்த 2மீங்களுக்கு மீ 1-க்கு ரூ 50-வீதம் கானடுகொத்தான் மகா-ா ா-ஸ்ரீ சா. ரும. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களிடமிருந்து மாதச்சந்தா வரவு ரூ ... | 100 | 0 | 0 | சங்கச் சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ... | 206 | 13 | 11 |
| | | | | கலாசாலை மாணவர்களுக்கு ஆகாராதி போஷணைக்காகச் செல்லாக்கியது ... | 44 | 3 | 3 |
| 1910-ஆம் நவம்பர்மீ முதல் 1911-ஆம் யேப்பிரல்மீ முடிய மீ 6-க்கு மீ 1-க்கு ரூ 10-வீதம் எட்டயபுரம் ராஜா அவர்களிடமிருந்து மாதச்சந்தா வரவு ரூ ... | 60 | 0 | 0 | பைண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு 0—11—6<br>ஷை ஆபீசு கண்டின்ஜென்ஸிச் செலவு 14— 5—5 | | | |
| 1912-ம் ஆம் மேமாதத்துக்குரிய புதுக்கோட்டைசமஸ்தானம் மாதச்சந்தா வரவு ... | 50 | 0 | 0 | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | 15 | 0 | 11 |
| செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ... | 40 | 5 | 0 | பிரிண்டிங் ஆபீஸ் ஸ்டேஷனரிச்செலவு 89-4-6 | | | |
| பிரிண்டிங்ஆபீசு அச்சுக்கூலிவரவு 256—6—9 | | | | ஷை ஆபீசுசம்பந்தமான ரயில்வேசார்ஜ் 3-2-0 | | | |
| சங்கம் ஆபீசு சம்மந்தமான அச்சுக்கூலி வரவு ... 91— 9—9 | | | | ஷை ஆபீசு ஆயில்என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு 11—10—2 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ... | | 348 | 0 | 6 |
| பைண்டிங் ஆபீசு வரவு ... | 20— 8—0 | | | |
| சங்கம்ஆபீசு சம்பர்தமான பைண்டிங் வரவு ... | 34—11—0 | | | |
| ஆக பைண்டிங் ஆபீசு வரவு ... | | 55 | 3 | 0 |
| புத்தக விற்பனை வரவு ரூ ... | | 72 | 9 | 0 |
| சங்கம் காலிநிலம் மரக்கடை வாடகை நாளது பரீதாபி-வூல சித்திரை மீ' த்துக்கு வரவு ... | 55— 0—0 | | | |
| விளம்பர வகையிற் சார்ஜ் வரவு | 12— 2—0 | | | |
| பிரின்டிங் செய்தனுப்பிய வகையில் பாக்கிங் சார்ஜ் வரவு ரூ | 0—10—6 | | | |
| சங்கம் வருஷோற்சவத்துக்கு வாவாங்கிய சாமான்களில் மீதியான சில்லரை சாமான்களை விற்றவகையில் வாவு ரூ | 1— 8—0 | | | |
| பிரின்டிங் உபயோகமாக வாங்கிய காகிதத்துக்கு அதிகக்கிர | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஷெ ஆபீஸ் லெட்வாங்கியதும் கண்டின்ஜன்ஸிச்செலவுமாக ரூ | 39 — 1—0 | | | |
| ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | | 143 | 1 | 8 |
| போஸ்டேஜ் வகையிற் செலவு ... | | 27 | 6 | 0 |
| ரிபேர்வகையிற் செலவு ... | | 1 | 4 | 0 |
| சங்கம் ஆபீஸ் இருக்கிற கட்டிடத்துக்கு பிப்பிரவரி, மார்ச்சு இந்த இரண்டு மாதங்களுக்கு வாடகை செல்லாக்கிய வகையில் வாபஸ் வந்ததொகை செல்லாக்கியது ரூ | 1—15—0 | | | |
| யேப்பிரல்மாசத்திய வாடகை ரூ | 25— 0—0 | | | |
| ஆக செல்லாக்கியது ரூ ... | | 26 | 15 | 0 |
| சங்கம் பதினோராவது வருஷோத்சவவிஷயமாய் வித்வான்களுக்கு சாப்பாடு முதலிய உபசாரணைச் செலவு ரூ | 114—1-11 | | | |
| சங்கம் தனித்தமிழ் பண்டித பரீக்ஷையிற் றேறியவருக்கு தோடாச்செய்தவகையில் செலவு ரூ | 105—6—0 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யம் கொடுத்தவகையில் வாபஸ் வரவு ரூ 0— 4—0 | | | | ரசிதுலேபிள், வண்டிவாடகைவகை யரு செலவு ரூ 0—15—0 | | | |
| | | | | ஆபீஸ் ஸ்டேஷனரி கண்டின்ஜன்ஸி செலவு வகையரு ரூ 1— 0—6 | | | |
| | | | | பிரிண்டிங் ஆபீஸ் பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைக்குச் செல் ரூ ... 91—9—9 | | | |
| | | | | ஷை ஆபீஸ் பில்ப்படி ஷை ஆபீஸ் பைண்டிங் வகைக்குச் செல் ரூ 34—11—0 | | | |
| ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ரூ | 69 | 8 | 6 | ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ... | 347 | 12 | 2 |
| ஆக மொத்தம் ரூ | 795 | 10 | 0 | *As per P.B. No. 263 of Madura Co-oprative ஆகமொத்தம்செலவு | 812 | 8 | 11 |
| சென்றயேப்பிரல்மீ த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ... | 820 | 14 | 1 | Stores-Rs. 740—0—0 போகபாக்கியிருப்பு | * 803 | 15 | 2 |
| ஆக மொத்தம் வரவு ... | 1616 | 8 | 1 | With the Manager Rs. } 63-15-2 ஆக மொத்தம் ... | 1616 | 8 | 1 |
| ஆக மொத்தம் ரூ ... | 1616 | 8 | 1 | Rs. 803-15-2 ஆக மொத்தம் ... | 1616 | 8 | 1 |

T. A. SUBBUVENKATARAMA IYER,
*Manager.*
5—6—12.

*Audited and found Correct*
S. GOPALASAMY IYENGAR,
12—6—12. *Auditor.*

# நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்

# பூரண ஆரோக்கியம்

என்பது யாதொரு வியாதியுமின்றி வெகுசுத்தமாய் அமைந்திருக்கிறது ஆகையினாலே எப்பொழுதாவது மாறுதல் ஏற்பட்டாலும் அல்லது அற்ப இடையூறுண்டாவதாய் நீங்கள் உணர்ந்தாலும் உடனே தற்கால பலவிருத்தி ஔஷதமாகிய

## ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களைத் தஞ்சமெனக் கைப்பற்றுங்கள்.

அதி சீக்கிரத்தில் இப்.மாத்திரைகள் கொடுக்கக்கூடிய குணம் என்னவெனில், முதலாவது ஜீரணசக்தியை ஒழுங்கு படுத்துகிறது. இதைச் சீர்படுத்தியபொழுது உங்கள் சரீரத்திலுள்ள பாதிப்பிணிகள் நீங்கிவிடுகின்றன. மாத்திரைகளைத் தொடர்ச்சியாய் உபயோகித்துவரின் சீதோஷ்ண வேறுபாடு முதலிய காரணங்களால் உண்டாகும் சகல குழப்பங்களை நீக்குவதுமல்லாமல், பலவித தொத்து வியாதிகளையும் தடுக்கின்றன.

இந்த மாத்திரைகளைச் செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடிய எந்த பதார்த்தமும் உபயோகிக்கப்படுவதில்லை. இதன்றி அவைகள் தீங்கற்றவை.

ஒரு டப்பி மாத்திரையை முயற்சித்துப் பாருங்கள். விலை ரூபா ஒன்று தான்.

இன்னும் சவிஸ்தாரமாய் அறியவிரும்பினால் இனாமாய்க் கோடுக்கப்படுகிற எங்கள் **180** பக்கங்கோண்ட புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22 பிராட்வே மதிராஸ்.

பல கண்காக்ஷிகளில் மேடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்

# பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை

ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

15. உயர்ந்த கஸ்தூரி:—மிகவும் நேர்த்தியானதும், முதல்தரமானதும், காஷ்மீர் தேசத்திலிருந்து நேராகவரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48. ஒரு ரூபாய்க்கு குறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. சிலவு பிரத்தியேகமாகும்.

16. தேள் கொட்டின் மருந்து:—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால், தக்ஷணமே விஷமிரங்கி, வருத்தப்பட்டு, சகிக்கமுடியாத வேதனையில் நின்று, நீங்கி, யாவரும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய், ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1-முதல் 12-சீசாக்கள் வரையிலும் வி. பி. சிலவு அணா 5-பிரத்தியேகம்.

முக்கிய குறிப்பு.—ஒரே தட்வையில் 12-சீசா தேள்கொட்டின் மருந்துக்குக் குறையாமல் வாங்கினால் டஜன் 1-க்கு ரூ. 2-8-0 வீதம் கொடுக்கப்படும். வி. பி. சிலவு அணா 5-பிரத்தியேகம். "இக்குறிப்பு தேள்மருந்துதவிர மற்றெந்த மருந்திற்கும் சம்மந்தப்படமாட்டாது."

17. மேகரண மருந்து:—இதை வெள்ளைத்துணியில் தடவி ரணங்களின்மேல் போட அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை, செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுளியின் பிளவை, கிரந்தி, மேக வெடிப்பு, இலிங்கப்புற்று யோனிப்புற்று முதலிய இரணங்கள் ஆறி, சொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணா 8, இந்தியாவிலும், பர்மாவிலும் 1-முதல் 3-சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5-பிரத்தியேகம்.

18. கண்டசுத்தி மாத்திரைகள்:—டைரக்ஷனில் சொல்லியபடி இதை சாப்பிட்டுவந்தால் தொண்டைக்கட்டு, தொண்டைகம்முதல் நீக்குவதும் அன்றி, இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குரலைத்தரும். சங்கீதவித்வான்களுக்கும், பிரசங்கஞ்செய்பவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனை நேரம்பாடினாலும், பிரசிங்கித்தாலும், குரல் கம்மாது. இனிமையான ஓசையைத்தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும், பர்மாவிலும் 1-முதல் 6-சீசாக்கள்வரையில் பாக்கிங்கு தபால் முதலிய சிலவு அணா 5-பிரத்தியேகம்.

---

முக்கிய கவனிப்பு:—என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும், எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

No. 2.

# CHILDREN IN INDIA.

have much to contend with, owing to the enervating climate.

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and muscles.

## SCOTT's EWULSION

contains the proper bone and tissue builder for children.

*IT IS IDEAL.*

The results are noticeable shortly after taking.




NOT TOUCHED BY HAND

*FOR SALE AT ALL CHEMISTS.*

SCOTT & BOWNE, LTD.
MANUFACTURING
CHEMISTS

LONDON, ENGLAND

No. 3.

# CHAMBERLAIN'S COUGH REMEDY.

## இருமலுக்கு சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த மருந்து.




இது,

இருமல், சீதளம், சளிமாந்தம்,

நெஞ்சிழைவு, கக்குவாய் இருமல்

முதலான: தொண்டை, மார்வியாதிகளை

எல்லாம் நீக்கும்.

இருமல் விஷயத்தில் அசட்டையாயிருக்கலாகாது. அது அபாயத்துக்கிடமான நோய். அது, கபவாதசுரம், இரத்தகாசம், க்ஷயரோகம் முதலியவைகளில் கொண்டு விடும்.

சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த இருமல் மருந்து, நெஞ்சிலிருக்கும் கபம் அல்லது கோழையை நீக்கும்; உப்பசத்தை ஒழிக்கும், மனதில் சுகியுண்டாக்கும், இருமலையும் போக்கும் நுரையீரலில் (மாரடைப்பு) கஷ்டமில்லாமல் சுவாசம் தாராளமாய்ப் போகவரச்செய்யும். இரவில் இருமலின் உபத்திரவத்தைக் குறைக்கும் நித்திரையைக்கொடுக்கும்.

சேம்பர்லேன் துரை செய்த இருமல் மருந்தில் அபினிக் கலப்பில்லை.

**☞ இது மூலிகைமயமான மருந்து.**

**☞ கைபடாமல் செய்த மருந்து.**

**எங்கும் கிடைக்கும்.**

**சின்ன புட்டி ரூ. 1—0—0  பெரிய புட்டி ரூ. 2—0—0**